ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

புரட்டாசி
செப்டம்பர்–1978



ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை–600 004.

விலை 85 காசு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	**ரூ. 8**
ஆயுள் சந்தா	**ரூ. 100**
தனிப் பிரதி	**85 காசு**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ.10-ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். **இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.**

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-600 004

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள், பொன்மொழிகள், மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ்நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஓர் அழைப்பு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் 245 ஊர்களில் பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை விநியோகிக்க விரும்பினால், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

சந்தாதாரர்களுக்கு

தங்களுக்கு பிரதிகள் அனுப்பப்படுவது சம்பந்தமாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயத்திற்குக் கடிதம் எழுதி பதில் பெற விரும்பும் சந்தாதாரர்கள், தங்கள் கடிதத்துடன் போதிய தபால்தலைகளை இணைத்து அனுப்புவது நலம்.

தங்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் விலாசத்தைக் கவனமாகச் சரிபார்த்துக் குறையிருந்தாலோ, முகவரி மாற்றம் செய்து கொண்டாலோ உடனுக்குடன் தகவல் தெரிவியுங்கள்.

ஆங்கில மாத 15-ம் தேதி வரையிலும் தங்களுக்குப் பத்திரிகை வந்து சேராவிட்டால், கடிதம் எழுதி காரியாலயத்திற்குத் தகவல் தெரிவிக்கக் கோருகிறோம்.

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது தாங்கள் டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டெபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி–58	செப்டம்பர் 1978	இதழ்—9

பொருளடக்கம்

சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 10,000 முதல் 10,100 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை செப்டம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தாத் தொகை ரூ. 8ஐ செப்டம்பர் மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சந்தா எண் 11,000 முதல் 11,300 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை அக்டோபர் மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 12,000 முதல் 12,800 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள எண்களுக்கிடையில் உள்ள சிலர், ஏற்கனவே சந்தாவை அனுப்பிப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் புதுப்பித்துக்கொள்ளாத அன்பர்கள் கூடிய விரைவில் சந்தாவைச் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

பெரும்பாலும் நமது பத்திரிகையின் எல்லாச் சந்தாதாரர்களுமே, சந்தாவைப் புதுப்பித்துக் கொள்பவர்களே ஆவர். சந்தாவைக் கூடிய விரைவில் முன்னதாகவே செலுத்துவதால் பல சங்கடங்களையும் குழப்பங்களையும் தவிர்க்க முடிகிறது. மேற்கொண்டு சந்தாவைத் தொடர இயலாதவர்கள், அல்லது உரிய காலத்திற்குள் சந்தாவைச் செலுத்த இயலாதவர்கள்—முன்னதாக ஒரு கார்டு எழுதித் தகவல் தெரிவிப்பது எங்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சிறப்பு மலராக வெளிவருவது வாசகர்கள் அறிந்ததே. இந்த ஆண்டு நவம்பர் மாதம் விஜயம் சிறப்பு மலராக வெளிவர இருக்கிறது.

நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வெள்ள நிவாரணப் பணி
ஒரு வேண்டுகோள்

சமீபத்தில் வட இந்தியாவின் பல பகுதிகளில் ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும் தாழ்ந்த பகுதிகளில் தண்ணீர் தேங்கியதாலும், பெருமளவில் உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளதைப் பொதுமக்கள் நன்கறிவர். வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவாகப் பரவி வரும் பலவித நோய்கள், ஏற்கனவே கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரும் சோதனையாக அமைந்துள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், பிகார் மாநிலத்தைச் சேர்ந்த தர்பங்கா மாவட்டத்தில் ஹாயாகாட் பகுதிகளில் வெள்ள நிவாரணப் பணிகளைத் துவக்கியுள்ளது. 166 சதுர கிலோ மீட்டர் பரப்பைக் கொண்ட 77,400 குடிமக்களைக் கொண்ட 17 பஞ்சாயத்துப் பகுதிகளில் உடனுக்குடன் நிவாரணம் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் உணவுப்பொருள், உடைவசதி, மருத்துவ உதவி ஆகியவை அவசரமாகத் தேவைப்படுகின்றன.

இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ள வேறு பல பகுதிகளிலும் நிவாரண வேலைகளைத் துவக்குவது அவசியமாகலாம்.

இந்த நிவாரணப் பணிகள் சிறப்பாக நடந்தேறப் பணமாகவோ பொருளாகவோ தந்து உதவும்படி, கருணையுள்ளம் கொண்ட பொதுமக்களை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் கேட்டுக் கொள்கிறது. கடந்த காலங்களில் உதவியதைப் போலவே, இப்போதும் இந்த அன்புச் சேவையைப் புரிவதில் பொதுமக்கள் எங்களுக்குத் தாராளமாக உதவ முன்வருவார்கள் என்று நம்பியிருக்கிறோம்.

இந்தப் பெரும் பணிக்கான நன்கொடைகள் அனைத்தும் நன்றியுடன் ஏற்கப்படும். நன்கொடை ஏற்றதன் விவரமும் தெரிவிக்கப்படும். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுக்கு அளிக்கப்படும் எல்லா நன்கொடைகளுக்கும் வருமான வரி விலக்குச் சலுகை உண்டு.

கீழ்க்கண்ட முகவரிகளுக்கு உதவியை அனுப்பலாம். செக் அல்லது டிராப்ட் அனுப்புவோர் 'ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்' என்ற பெயருக்கு அனுப்பக் கோருகிறோம்.

1. Ramakrishna Misson, Belur Math, Dist. Howrah-711 202
2. Advaita Ashrama, 5, Dehi Entally Road, Calcutta-700 014
3. Udbodhan Office, 1, Udbodhan Lane, Calcutta-700 003
4. Ramakrishna Mission Institute of Culture, Gol Park, Calcutta-700 029
5. Ramakrishna Mission Ashram, Ramakrishna Avenue, Patna-800 004
6. Ramakrishna Mission Vivekananda Society, 'L' Road, Bistupur, Jamshedpur-831 001
7. Ramakrishna Mission, Ramakrishna Ashrama Marg, New Delhi-110 055
8. Ramakrishna Mission, Ramakrishna Mission Marg, Khar, Bombay-400 052
9. Ramakrishna Mission, Sullivan Garden Street, Mylapore, Madras-600 004

பேலூர் மடம்
8-8-78

சுவாமி கம்பீரானந்தர்
பொதுச் செயலாளர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 58	காளயுக்தி ஹு புரட்டாசி மீ	இதழ் 9



मूषिकवाहन मोदकहस्त चामरकर्ण विलम्बितसूत्र ।
वामनरूप महेश्वरपुत्र विघ्नविनायकपाद नमस्ते ॥

மூஷிகவாஹந மோதகஹஸ்த சாமரகர்ண விலம்பிதஸூத்ர ।
வாமநரூப மஹேச்வரபுத்ர விக்நவிநாயகபாத நமஸ்தே ॥

மூஷிக வாகனனே! மோதகத்தைக் கையில் கொண்டவனே! சாமரம் போலுள்ள காதுகளை உடைய்வனே! அசைந்தாடும் பூணூலைத் தரித்தவனே! குறுகிய வடிவம் வாய்ந்தவனே! மஹேச்வர புத்திரனே! விக்கினங்கள் வராமல் தடுக்கும் திருவடிகளை உடையவனே, உனக்கு வணக்கம்.

தஞ்சம் என்றுனைச் சார்ந்தனன் எந்தைநீ
  தானும் இந்தச் செகத்தவர் போலவே
வஞ்சம் எண்ணி இருந்திடில் என்செய்வேன்?
  வஞ்சம் அற்ற மனத்துறை அண்ணலே!
பஞ்ச பாதகம் தீர்த்தனை என்றுநின்
  பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
  விளங்கும் சித்தி விநாயக வள்ளலே!

—கணேசத் திருவருள்மாலை

விஜய தீபம்

வித்தைகளின் ஆதாரம்

அங்கிங்கெனுதபடி பரம்பொருள் பிரபஞ்சம் முழுவதிலும் நீக்கமற நிறைந்துள்ளது. இந்தக் கருத்தை முமுட்சுக்களின் உள்ளத்தில் ஆழ்ந்து பதியச் செய்யும் வகையில் உபநிஷதங்கள் மீண்டும் மீண்டும் அயராது வலியுறுத்துகின்றன.

முண்டக உபநிஷதத்தின் முதலாவது மந்திரத்தின் மூலத்தில், ''ஸ ப்ரஹ்மவித்யாம் ஸர்வவித்யா-ப்ரதிஷ்டாம்'' என்று கொடுக்கப்பட்டுள்ளது. அதன் நேர்மொழிபெயர்ப்பு, ''அந்தப் பிரம்மவித்தை எல்லா வித்தைகளுக்கும் பிரதிஷ்டையாக (ஆதாரமாக, அடிப்படையாக) விளங்குகிறது'' என்பதாகும்.

'பிரம்மம் அழிவில்லாதது; அது சுத்த சைதன்ய மயமாக இருக்கும் வஸ்து; இயல்பு திரியாமல் இருந்த படியே இருப்பது. ஓவியன் ஒருவன் தனது கற்பனையால் பல வகையான சித்திரங்கள் வரைகிருன். அவன் ஒரு யானையை வரைந்தால் படம் யானையாக ஆவதில்லை. அவன் ஒரு பசுவை வரைந்தால் படம் பசுவாக ஆவதில்லை. ஓவியன் கர்த்தா. காரியத்திலிருந்து அவன் எப்போதும் தனித்து நிற்பவன். அவனுள் இருக்கும் சுத்தான்மா சாட்சியாக இயல்பு திரியாமல் இருந்தது இருந்தபடியே இருக்கிறது. கற்பனையே ஓவியங்களை வரைகிறது. அதுபோலவே பரமன் சர்வ சாட்சி சேதனனுக இருக்கிருன்' என்று கூறுவதன் மூலம், 'பிரம்மம் அனைத்திற்கும் ஆதாரமாயினும் அது சிருஷ்டியினுல் எவ்விதக் குறைபாட்டையோ களங்கத்தையோ அடைவதில்லை' என்ற பாரமார்த்திக உண்மையை ஆன்ருேர் விளக்கியுள்ளனர். பாம்பின் வாயிலேயே விஷம் இருப்பினும் அந்த விஷம் காரணமாகப் பாம்புக்கு ஊறு நேர்வதில்லை. தான் சுமந்து செல்லும் நறுமணத்தாலோ துர்நாற்றத்தாலோ காற்று பாதிக்கப்படுவதில்லை. அதுபோல் அனைத்திற்கும் பிரம்மம் ஆதாரமாயினும் அது காரணமாகப் பிரம்மத்திற்குப் பாதிப்பு ஏதும் நேர்வதில்லை. அது தனது இயல்பில் சைதன்யமாகவும் நித்தியமாகவும் நிரஞ்ஜனமாகவும் விளங்குகிறது.

இறைவன் அனைத்திற்கும் ஆதாரமாக, சூட்சுமமாக இருந்துகொண்டிருக்கிருன். அதாவது புல் முதல் பிரம்மா வரையிலும் விரிந்துள்ள சேதனப் பொருள்களாகிய ஜீவராசிகளுக்கும், அணு முதல் அண்டம் வரையிலும் விரிந்துள்ள அசேதனப் பொருள்களாகிய ஜடப் பொருள்களுக்கும் நித்திய வஸ்துவாகிய பிரம்மமே ஆதாரமாக இருக்கிறது. சினிமாப் படங்கள் அனைத்தும் காட்டப்படும் திரையின் மீது பல வேறு காட்சிகள் வரவும் போகவும் செய்கின்றன. ஆனுல், காட்சிகள் தோன்றுவதற்குத் திரையே ஆதாரமாக இருக்கிறது. அது போன்று, சிருஷ்டிக்கு வந்துள்ள அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் தத்தம் இருப்புக்குப் பிரம்மத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. 'ஸ்வயம் பிரகாசமுள்ள அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கிறது; அவனுெளியாலேயே இவை அனைத்தும் விளங்குகின்றன.'*

எல்லா விதமான அறிவும் பிரம்மத்தில் தங்கியிருக்கிறது, நிலைபெற்றிருக்கிறது. உலகிலுள்ள சகல விதமான அறிவும் பிரம்மத்தின் மூலமாகவே அறியப்படுகிறது. பிரம்மம், பிரம்மவித்யை என்று இரண்டு விதங்களிலும் கூறப்படும் கருத்து ஒன்றேயாகும். ஏனெனில், பிரம்மவித்தையால் பிரம்மம் அடையப்படுகிறது. பிரம்மவித்தை பிரம்மத்தோடு தொடர்புடையது.

''எல்லா வித்யைகளும் தோன்றுவதற்கு விதையாக இருப்பது பிரம்மவித்யை. கண்ணுக்குக் கண்ணுகவும்,

---

* *தமேவ பாந்தமனுபாதி ஸர்வம், தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி. — கடோபநிஷத்து*

புலன்களுக்குப் புலன்களாகவும், உயிருக்கு உயிராகவும், உலகிற்கு உலகாகவும் விளங்குவது பிரம்மம்.

''எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகிறதோ அல்லது எல்லா வித்யைகளாலும் எது ஒன்றே அறியத் தகுந்ததோ அது பிரம்மவித்யை; அது எல்லா வித்யைகளுக்கும் (பிர திஷ்டை) ஆதாரம்.

' சாந்தோக்ய உபநிஷதம் பிரம்மம் அல்லது பிரம்மவித் தையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது: எதனுல் கேட்கப் படாதது கேட்கப்பட்டதாயும், உணரப்படாதது உணரப் பட்டதாயும், அறியப்படாதது அறியப்பட்டதாயும் ஆகி றதோ—அதை (பிரம்மத்தை)க் குறித்து எப்போதாவது நீ கேட்டிருக்கிருயா?''—ஸ்ரீசங்கரரின் கருத்தைத் தழுவியது.

மரம் ஒன்றில் கனிகளும் மலர்களும் நிறைந்திருக் கின்றன. மக்கள் அதன் கனிகளைப் பறித்துச் சுவைத்து உண்கிருர்கள். அந்த மலர்களின் அழகைக் கண்டு வியந்து போய் ரசிக்கிருர்கள். ஊருணியாக இருந்து அந்தப் பழுமரம் உலகத்தவர் களுக்குப் பயன்படுகிறது. அது போலவே உலக மாகிய மரத்தில் எண்ணற்ற அறிவுத் துறைகள் (வித்யைகள், ஞானங்கள்) கனிகளைப் போல நிறைந்திருக்கின்றன. அந்த மரத்தின் மலர்களைப் போலக் கண்ணையும் கருத்தையும் கவரும் பலவித மான இயற்கைக் காட்சிகள் பூத்துக் குலுங்கு கின்றன. ஒரு வள்ளலைப் போலக் கனிகளையும் மலர் களையும் வாரி வழங்கும் அந்த மரத்திற்கு வேர் ஆதாரமாக இருந்துகொண்டிருக்கிறது. பலவிதமான அறிவுகளுக்கும் இயற்கைக் காட்சிகளுக்கும் நிலைக் களனுக விளங்கும் உலகிற்குப் பிரம்மம் ஆதாரமாக விளங்குகிறது.

மரத்தின் பயனில் மட்டும் ஆர்வம் கொள்ளும் மக்கள், அந்த மரத்திற்கு ஆதாரமாக வேர் இருப் பதில் ஆர்வம் கொள்வதில்லை. அப்படியே, உலகில் உள்ள அறிவுகளையும் போகப் பொருள்களையும் நாடிப் பயன் பெறுவதில் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள லௌகிகம் நிறைந்த அஞ்ஞானி களுக்கு, அவற்றுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள பிரம்மம் விளங்குவதில்லை. அஞ்ஞானிகளுக்கு விளங்காத அந்த உண்மை, விவேகம் மிக்க ஞானி களுக்குப் பிரம்மாநுபவமாக உள்ளங்கை நெல்லிக் கனியாக விளங்குகிறது. மரத்தைப் பார்க்கும் மக்கள், அதற்கு ஆதாரமான வேர் இருப்பதை மறந்தாலும் வேர் இருந்துகொண்டுதான் இருக்கிறது. பலவித ஞானங்களைப் பெறும் மக்கள் அதற்கு ஆதாரமாகப் பிரம்மம் இருப்பதை மறந்தாலும் பிரம்மம் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

உலக வாழ்க்கையைக் குறிப்பிடுவதற்காகச் 'சம் சாரம், சம்சாரம்' என்ற சொல்லை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறேம். உற்றர் உறவினர், தோட்டம் துரவு, பெயர் புகழ், செல்வம் வறுமை, பட்டம் பதவி என்று சம்சாரத்தில் அடங்கியவற்றில் சாரமாக எத் தனை இருக்கின்றன என்று உண்மையாகவே ஆராய்ந்து பார்த்தால், 'பிரம்மத்தைத் தவிர வேறு எந்த ஒன்றுமே சாரமாக இல்லை; சக்கையாகத் தான் இருக்கிறது' என்ற உண்மையே முடிவில் எஞ்சி நிற்கும். பிரம்மத்தைத் தவிர வேறு எதுவுமே பிரபஞ்சத்திற்குச் சாரமாக எக்காலத்திலும் இருந்த தில்லை, இருக்கவில்லை, இருக்கப் போவதுமில்லை. பிரம்மத்துக்கு அன்னியமாக எதுவுமே இல்லை என்பதுதான் சாஸ்திரங்களும் மகான்களும் கண்ட தெளிந்த ஓர் உண்மை. கீதையின் விச்வரூப தரிசனமும், கண்ணனின் மண்ணுண்ட வாயில் யசோதை கண்ட பிரபஞ்ச தரிசனமும் பிரம் மத்தில் அனைத்தும் அடக்கம் என்பதை உணர்த்து கின்றன. எல்லாப் பொருள்களுக்கும் உயிர்க் கூட்டங்களுக்கும் பின்னணியில் அடிப்படையாக இருந்து ஒரு சைதன்ய வஸ்து (பொருள்) தாங்கி நிற்கிறது. அது ஒன்று மட்டுமே வஸ்து என்று சொல்லத்தக்கது. ஏனையவை அனைத்தும் எவ்வளவு தான் போற்றப்பட்டாலும், மகிமை கொண்டதாகக் கருதப்பட்டாலும், அவஸ்து (பொருள் ஏதும் இல்லாததே) ஆகும். ஏராளமான நிலம், தோட்டம், பங்களாக்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியைவிட இவற்றுக்கெல்லாம் உரிமையாளனுக விளங்கும் பிரம்மத்தை அறிவதே விவேகம் மிக்க செயல் ஆகும். ஸ்ரீராமகிருஷ்ணதேவர் எடுத்துக்காட்டிய தைப் போல, மரத்தில் எத்தனை கிளைகள், இலைகள் என்று கணக்கிடுவதற்காக நாம் இந்த உலகில் பிறக்கவில்லை. கிளைகளையும் இலைகளையும் எண்ணிக் கொண்டிருப்பதை விட்டுப் பழங்களைப் பறிக்கவும் புசிக்கவும் செய்வதே அறிவுடைய செயல் ஆகும். உரிமையாளனை அறிவதைப் போலவும், பழம் உண் பதைப் போலவும் பிரம்மம் ஒன்றை மட்டுமே நாடும் செயல் அமைகிறது. எனவேதான் ஞானசாதகன் இந்த உலகை விநோதங்கள் பல நிறைந்த ஒரு கனவைப் போலக் கருதுகிருன். மற்றவர்களைப் போலவே உலகை நடைமுறை வாழ்க்கையின் விவகாரங்களுக்கு அவன் ஒப்புக்கொண்டாலும்

அதில் தானும் ஒட்டிக்கொண்டுவிடாமல் அந்தரங்க உள்ளத்தில் இந்த மித்யை உலகத்தின் ஆதாரமான பிரம்மத்தையே அவன் நாட முயல்கிறான்.

'இந்த ஆலம்பனம் (ஆதாரம், பிடிப்பு) சிறந்தது; இந்தப் பிடிப்பு உயர்ந்தது. இந்தப் பிடிப்பை அறிந்தால் ஒருவன் பிரம்மலோகத்தில் மகிமை அடைகிறான்'* என்று உபநிஷதமும் ஞானசாதகன் தனது லட்சியத்தில் மேல்நோக்கிச் செல்ல ஊக்குவிக்கிறது. கவனமும் முயற்சியும் உள்ள ஞானசாதகன், எல்லா இதயமுடிச்சுகளும் அவிழ்ந்த நிலையில் பிரம்மலோகம் எனப்படும் ஹிரண்யகர்ப்ப நிலையையும் கடந்து, சிருஷ்டியின் மூலாதாரமாகிய பிரம்மத்தை அடைகிறான்.

* * *

பழைய கற்கால மனிதனைப் போல மந்தபுத்தி உள்ளவன் ஒருவன் இருக்கிறான். புதிதாக அவன் ஓர் ஊருக்குச் சென்றபோது, ஆறு ஒன்று அந்த ஊரில் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறான். அவனுக்கு அந்த ஊரிலே ஆறு ஓடுவது மட்டும்தான் தெரியும். அந்த ஆற்றுக்கும் உற்பத்தி ஸ்தானம் என்ற ஓர் இடம் உண்டு என்ற அறிவே அவனுக்கு எழுவதில்லை. ஆனால் புத்திசாலிக்கு ஆற்றைப் பார்த்ததுமே அதற்கு ஓர் உற்பத்தி ஸ்தானம் உண்டு என்ற எண்ணமும் கூடவே எழுந்துவிடுகிறது. மந்தபுத்தி உள்ளவன் ஆனாலும், புத்திசாலி சொல்லுவதைக் கேட்டு ஆற்றைத் தொடர்ந்து செல்வானானால் உற்பத்தி ஸ்தானத்திற்குச் சென்று நேரிலேயே அதைப் பார்க்க முடியும். உலகிலுள்ள எந்த அறிவானாலும், அதனுடைய உற்பத்தி ஸ்தானம் எது என்று முறையாக உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், முடிவு பிரம்மம் என்பதில்தான் கொண்டுபோய்ச் சேர்க்கும். அறிவுகளுக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாக மட்டுமில்லாமல், அவை எல்லாம் சென்று அடங்கும் முடிவிடமாகவும் பிரம்மம் விளங்குகிறது. எந்த அறிவையும் அதன் முடிவாகிய அதனுடைய நியாயமான அதிகப்பட்சத் தூரத்திற்குத் தள்ளிக்கொண்டே போனால், அது சென்று முடியும் இடமும் பிரம்மமாகதான் இருக்கும்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிக் காய்கறிகளைப் போட்டு அடுப்பில் வைத்து வேக வைக்கிறோம். காய்கறிகளை வேக வைக்கும் உஷ்ணம் தண்ணீருடையதோ பாத்திரத்தினுடையதோ அல்ல. கீழே அடுப்பில் நெருப்பு இருப்பதனால் பாத்திரத்திலுள்ள நீர் கொதித்து, அதிலுள்ள காய்கறிகள் துள்ளிக் குதிக்கின்றன. காய்கறிகள் தாமாகவே குதிப்பது போலத் தோன்றினாலும், அதற்குக் காரணம் கீழே உள்ள நெருப்புத்தான். நெருப்பு ஆதாரமாக இருப்பதனால்தான் காய்கறிகள் துள்ளுகின்றன. அது போலவே பிரபஞ்சத்தில் நடந்து வரும் எல்லாச் செயல்களுக்கும் பிரம்மமே ஆதாரமாக என்றென்றும் இருந்து வருகிறது.

* ஏத—தாலம்பனம் ச்ரேஷ்ட—மேத—தாலம்பனம் பரம் | ஏத—தாலம்பனம் ஜ்ஞாத்வா ப்ரஹ்மலோகே மஹீயதே || —கடோபநிஷத், 2–17.


விநாயகர் உருவம்



விநாயகர் உருவம் ஒரு விந்தையான உருவம். யானைத் தலை, மனித உடல், பெருவயிறு, ஐந்து கைகள் என்று மனிதனும் அல்லாமல் விலங்கும் அல்லாமல் அமைந்திருக்கிறது. இப்படி ஒரு கடவுள் உருவம் அமைந்திருப்பதன் கருத்து யாது?

யானைத் தலை அஃறிணை; தெய்வ உடம்பு உயர்திணை. ஒரு கொம்பு ஆண்தன்மை; மற்றொன்று பெண்தன்மை—என்று பல தத்துவங்களை உணர்த்துகிறது. அதாவது விநாயகப் பெருமான் தேவராய், மனிதராய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் விளங்குகிறார் என்பதைப் புலப்படுத்துகிறது.

அவருடைய ஐந்து கைகள் படைத்தல், காத்தல், மறைத்தல், அளித்தல், அழித்தல் என்ற ஐவகைத் தொழில்களையும் உணர்த்துகின்றன. பெருவயிறு, உலகங்கள் அனைத்தையும் தம்முள் அடக்கியிருப்பதை உணர்த்துகிறது



ஜூனியர் நரேன்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருமைச் சீடராகிய சுவாமி விவேகானந்தர் துறவறம் ஏற்பதற்கு முன்பு நரேன், நரேந்திரன், நரேந்திரநாத் தத்தர் என்ற பல பெயர் களில் அழைக்கப்பட்டார். சுவாமி விவேகானந்தரைவிட வயதில் சிறியவர் நரேந்திரநாத மித்ரர். அவரை ஜூனியர் நரேன் என்று செல்லமாக அழைத்தார்கள்.

ஆன்மிக வாழ்க்கையில் இயற்கையாகவே நாட்டமுடைய ஜூனியர் நரேனை, மகேந்திரநாத குப்தர் பரமஹம்சரிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தினர். ஜூனியர் நரேன் கடவுளைக் காண வேண்டும் என்று மிகவும் சிறியவனாக இருந்தபோதே அழுவா னும். அவனுடைய புத்திக் கூர்மையைத் தமது குருவாகிய தோதாபுரி மகராஜின் புத்திக் கூர்மைக்கு இணையாகப் பரமஹம்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜூனியர் நரேன் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அலாதியான இதயபூர்வமான அன்பு வைத்திருந்தான். அவன் வீட்டில் உள்ளவர்கள் திட்டுவதையும் தண்டனை கொடுப் பதையும் பொருட்படுத்தாமல், பரமஹம்சருடன் தட்சிணேசுவரத்திலேயே இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிடுவான். சில சமயங்களில் இறைவனின் நாமசங்கீர்த்தனத்தில் தன்னையும் மறந்த பரவச நிலையில் இரண்டு மணி அல்லது அதற்கு மேலும் இருப்பான்.

ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணதேவர், டாக்டர் மகேந்திரலால் சர்க்காரிடம், ''இந்தச் சிறுவன் மிகவும் தூய்மையுடையவன். உலக ஆசைகளாகிய மாசு இவனைத் தொட வில்லை. இவனுடைய சிரிப்பில் எள்ளளவும் கள்ளம் கபடமற்ற உள்ளத்தைக் காண லாம்'' என்று கூறினர்.

ஜூனியர் நரேனிடம் பரமஹம்சதேவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பையும் ஈடுபாட்டையும் கண்டு எல்லோரும் பிரமித்துப் போவார்கள். அந்தச் சிறுவனைச் சேர்ந் தாற்போல் தொடர்ந்து சில தினங்கள் காணுவிட்டால் பரமஹம்சதேவர் உடனே அவனை அழைத்துவரச் சொல்லி அவனுக்குத் தமது கையாலேயே தின்பண்டங்களை ஊட்டிவிட்டு மகிழ்வார். ஜூனியர் நரேன்தான் எப்படிப்பட்ட பாக்கியசாலி!

பரமஹம்சதேவர், உலகத்தின் மாசு ஒருசிறிதும் படியாத தூய மனம் கொண்ட சிறுவர்களுக்குப் பண்பும் பாசமும் அபரிமிதமாகக் கொண்ட தாயாக விளங்கினர். அவர் தாமே தமது கையால் அத்தகைய சிறுவர்களுக்குப் பழங்களையும் தின்பண்டங்களையும் வாயில் ஊட்டிவிடுவார். அப்படி ஒரு பெரிய பாக்கியம் கிடைக்கப்பெற்ற சிறுவர்களிலே ஜூனியர் நரேனும் ஒருவன்.

தம்மிடம் ஜூனியர் நரேன் வந்தபோது பரமஹம்சதேவர் அவனுடைய மேல் சட்டையைக் கழற்றும்படி சொல்லி, அவனுடைய அங்கக் கூறுகளைக் கவனித்தார். ஜூனியர் நரேனின் அகலமான பரந்த மார்பைக் கண்ட அவர், "நீ ஆன்மிக வாழ்க்கையில் கட்டாயம் வெற்றி பெறுவாய். இங்கே (தம்மிடம்) அடிக்கடி வந்துகொண்டிரு" என்று அருளாசி வழங்கினார்.

ஒரு நாள் தமது பக்தர்களில் ஒருவராகிய பலராம் போஸ் வீட்டுக்குப் பரமஹம்ச தேவர் சென்றிருந்தார். அங்கே அவரைக் காண்பதற்கு ஜூனியர் நரேனும் சென்றிருந்தான். அப்போது பரமஹம்சதேவர் முகம் கழுவச் செல்வதை அறிந்து, ஜூனியர் நரேன் கையில் டவலுடன் அவரைத் தொடர்ந்தான். பரமஹம்சருக்கு அலம்பிக்கொள்ள வசதியாகத் தண்ணீர் ஊற்றினான். இந்த நிகழ்ச்சி, மகான்களுக்குச் சேவை செய்யும் அபூர்வ அதிர்ஷ்டசாலிகளில் ஜூனியர் நரேனும் ஒருவன் என்பதைக் காட்டுகிறது

ஒரு சமயம் தேவேந்திரன் என்ற பக்தரின் வீட்டில் எதற்காகவோ மகிழ்ச்சியோடு சிரித்துக்கொண்டிருந்த ஜூனியர் நரேனைப் பரமஹம்சதேவர் மகேந்திரநாத் குப்தருக்குச் சுட்டிக்காட்டி, "பார், பார். சிரிக்கும்போது அவன் கண்களைப் பார். எதுவுமே அறியாதவன் போல் தோன்றும் இந்தச் சிறுவனுக்கு மண், பொன், பெண் என்ற மூன்று விஷயங்களைப் பற்றிய நினைப்பே கிடையாது. மண், பெண், பொன் ஆசைகளை விட்டாலன்றி ஆண்டவனை யாரும் அடைய முடியாது" என்றார்.

மற்றொரு சமயம் ஸ்ரீராமகிருஷ்ணதேவர் தமது பக்தர்களிடம் பின்வருமாறு சொல்லிக்கொண்டிருந்தார்: "கடவுள் மனிதனாக அவதாரமெடுத்து வந்தாலும், அவரை அடையாளம் கண்டுகொள்வது என்பது எல்லோருக்கும் முடியாத காரியம். ஒருவனுக்கு விலையுயர்ந்த வைரம் கிடைத்தது. அதை அவன் விற்றுவிட எண்ணிக் கத்திரிக்காய் வியாபாரி ஒருவனிடம் எடுத்துச் சென்றான். வைரத்தைப் பார்த்து மதிப்பிட்ட கடைக்காரன், 'ஒன்பது சேர் கத்திரிக்காய் மட்டுமே தர முடியும்; அதற்கும் அதிகமாக இந்தக் கல்லின் மதிப்புக்குக் கத்திரிக்காய் எதையும் தருவதற்கில்லை' என்று சொல்லிவிட்டான்."

இவ்விதம் ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். அப்போது அங்கிருந்த ஜூனியர் நரேன், பரமஹம்சர் சொல்ல வந்த கருத்தின் உட்பொருளை உணர்ந்துகொண்டு பலமாகச் சிரித்தான். அதைக் கண்ட குருதேவர், "ஜூனியர் நரேனுக்குத்தான் என்ன துல்லியமான அறிவு! எளிதில் புரியாத விஷயங்களையும் தன் நுட்பமான புத்தியால் புரிந்துகொண்டுவிடுகிறான். புத்திக் கூர்மையில், திகம்பரராகிய தோதாபுரியையே இவன் ஒத்திருக்கிறான். அந்தத் திகம்பரரும் இவனைப் போலவே கீதை, பாகவதம் முதலிய புனித நூல்களின் அர்த்தங்களைப் பளிச்சென்று அறிந்துகொண்டு விடுவார்" என்று குறிப்பிட்டார்.

ஒரு நாள் பரமஹம்சதேவர் கேட்டதன் பேரில் திரைலோக்கியர் என்ற அன்பர் பாடிக்கொண்டிருந்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஜூனியர் நரேன், ஆழ்ந்த

தியானத்தில் அமர்ந்துவிட்டான். அந்த நிலையில் அவனது உடல் உயிரற்ற கட்டை போல் தோன்றியது. அப்போது ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கிருந்த மகேந்திரநாத் குப்தரிடம், ''இப்போது இந்தச் சிறுவனுக்குப் புற உலக நினைவே சிறிதளவுகூட இல்லை'' என்றார்.

மற்றொரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் பலராம் போஸ் வீட்டில் இருந்தபோது அங்கிருந்த எல்லோரிடமும், ''ஜூனியர் நரேன் ஏன் வரவில்லை? ஒருவேளை நான் தட்சிணேசுவரம் திரும்பிவிட்டேனென்று நினைத்திருப்பானோ?'' என்று விசாரித்துக்கொண்டிருந்தார். பிறகு அவர் அங்கிருந்த மகேந்திர முகர்ஜி என்ற பக்தரிடம், ''என்ன ஆச்சரியம்! பள்ளிக்கூடம் சென்று வரும் சிறுவனாக இருந்தபோதுகூட இந்தச் சிறுவன் இறைவனைக் காண அழுவான். இறைவனை நினைத்து அழுவது என்பது சாதாரண விஷயமா? அது மட்டுமா? இவன் மிகவும் கெட்டிக்காரன். என்னை மிகவும் நேசிக்கிறான். உள்ளே கூடு போல் அதிக வெற்றிடம் கொண்ட நல்ல மூங்கிலைப் போல இருக்கிறான். இவனுக்குச் சிந்தனை முழுவதும் என்மேலேதான் இருக்கிறது. ஒரு முறை கிரீஷ்சந்திர கோஷ் என்னிடம் இவனைப்பற்றி என்ன கூறினார் என்பது தெரியுமா? 'நவகோபால் வீட்டில் பஜனை நடந்துகொண்டிருந்ததைக் கேள்வியுற்று அங்கு வந்தான் ஜூனியர் நரேன். உள்ளே நுழைந்தவுடனே நீங்கள் (பரமஹம்சர்) எங்கிருக்கிறீர்கள் என்று தேடினான். அவனது சிந்தனை முழுவதும் உங்கள் ஒருவரைப் பற்றியே இருந்தது. ஒருவிதத் தெய்விகப் பரவச நிலையில் சுயநினைவின்றி, சூழ்நிலையை மறந்து, அங்கிருந்த அனைவரையும் மிதித்துக் கொண்டே அவன் நடந்து வந்தான்' என்று கூறினார்'' என்று பரமஹம்சர் மொழிந்தார்.

ஒரு சமயம் ராக்கால் ஹால்தார் என்ற அன்பரின் கேள்விக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் பதிலளிக்கையில், ''ஜூனியர் நரேன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியவன். அவனுக்கு உலக ஆசைகள் அறவே இல்லை. காமம் என்றால் என்ன என்று தெரியாது என்பான். இதை நான் உனக்குச் சொல்லும்போதே எனக்கு உடல் புல்லரிக்கிறது. என்னைப் பார்'' என்றார். அப்போது பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் உடல் முழுவதும் ரோமம் குத்திட்டு நின்று மயிர்க்கூச்சு உண்டாகியிருந்ததை ராக்கால் ஹால்தார் கண்டார். காமம் இல்லாத ஜூனியர் நரேனை நினைத்தவுடனே பரமஹம்சதேவருக்கு இந்த மாற்றம் ஏற்பட்டது. ''காமம் இல்லாத இடத்தில் கடவுள் உறைகிறார்'' என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

ஒரு நாள் ஜூனியர் நரேனிடம் பரமஹம்சர் தமது கருத்தை வெளியிட்டார்: ''கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தால் போதாது. கடவுளின் தரிசனம் எப்போதேனும் கிடைக்கப்பெற்றாலும் அதுவும்கூட முடிவானதல்ல. கடவுளிடம் நீ மிகவும் நெருங்கிப் பழகுவதோடு, அவருடன் நேரிடையாகவே ஒன்றிவிட வேண்டும். பலர் கடவுளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். சிலர் பார்த்திருக்கிறார்கள். மிகச் சிலரே அவரை அடைந்து ஆனந்திக்கிறார்கள். அனேகர் அரசனைக் கண்டிருக்கிறார்கள். ஆனால் அபூர்வமாக யாராவது ஒரு சிலர் மட்டுமே அரசனைத் தன் வீட்டுக்கு விருந்தாளியாக அழைத்துச் செல்ல முடியும்.''

சற்று விநோதமான சம்பவம் ஒன்று நடந்தது: ஸ்ரீராமகிருஷ்ணர் அப்போது சமாதி நிலையில் இருந்தார். அவர் அந்த நிலையில் விழுந்துவிடாதபடி ஜூனியர் நரேன் அவரைச் சற்றுத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டான். அது போல அவன் பல சந்தர்ப்பங்களில் பரமஹம்சதேவருக்கு உதவியாக இருந்திருக்கிறான். அவன் தூய்மையுடையவன் என்ற காரணத்தால் அவனது செயலை யாரும் தடுத்தது கிடையாது. ஆனால் அன்றைய தினம் அவன் பரமஹம்சரின் உடலைப் பிடித்துக்கொண்ட மாத்திரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் தாங்க முடியாத வலியால் அலறவே, பயந்து பின்வாங்கியபடியே ஜூனியர் நரேன் தன் கையை விலக்கிக்கொண்டான்.

ஜூனியர் நரேனுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. ''ஆகா! என் மனமும் மாசு அடைந்துவிட்டதா? என்ன செய்வேன்?'' என்று பிரமித்து, அவன் வாயடைத்துப் போய் நடுங்கியபடியே இருந்தான். சமாதி கலைந்து சுய நினைவுக்குத் திரும்பிய ஸ்ரீராமகிருஷ்ணர் ஜூனியர் நரேனின் பயத்தைப் போக்கி, ''நீ சமீபத்தில் ஓர் ஆபரேஷன் செய்து கொண்டாய் அல்லவா? அதன் புண் இன்னும் சரியாக ஆறவில்லை'' என்று காரணம் கூறினார்.

இதைப் படிக்கும்போது நமக்குச் சாஸ்திரங்களின் நினைவே வருகிறது. ஒருவனின் உடலில் காயம், ரணம் ஏதாவது இருந்தால் அவன் கடவுளின் திவ்ய சரீரத்தைத் தொடக்கூடாது என்பது சாஸ்திரவிதி. சமாதிநிலையில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கடவுளுடன் ஒன்றிக் கடவுளாகிவிட்ட நிலையில், காயத்துடன் அந்தச் சிறுவன் அவரது உடலைத் தொட்ட மாத்திரத்தில் அவரால் அதைத் தாங்க முடியவில்லை. இது போலவே தமது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் சாஸ்திரங்களின் உண்மைகளை எல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணர் பிரத்தியட்சமாகப் பிரதிபலித்திருப்பதனால் தான், சாஸ்திரங்களையே இன்றைய நவீன மக்கள் நம்பும் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஓர் இளைஞன் அன்பு கொண்டு பழகி வந்தான். ஒரு நாள் அவனிடம் ஜூனியர் நரேனைப்பற்றிப் பரமஹம்சதேவர் புகழ்ந்து பேசினார். ''அந்தக் கறுப்பு நிறமுள்ள சிறுவன் சமீப காலமாகத்தான் என்னிடம் வர ஆரம்பித்திருக்கிறான். அதற்குள்ளேயே கடவுளின் நாமம் கேட்ட மாத்திரத்தில் பரவச நிலையில் ஆழ்ந்துவிடுகிறான். அன்று ஒரு நாள் அவன் தன் பரவச நிலையிலிருந்து ஒரு மணி நேரமாகியும் வெளி உலக நினைவிற்கு வரவே இல்லை. அவனைக் கேட்டால், 'இப்போதெல்லாம் என் மனம் உருவ மற்ற அருவக் கடவுளிடமே லயிக்கிறது' என்கிறான். நீ போய் அவனுடைய வீட்டில் அவனைச் சந்தித்துப் பேசு'' என்று பரமஹம்சதேவர் அந்த இளைஞனிடம் கூறினார்.

அதற்கு அந்த இளைஞன், ''ஐயனே! எனக்குப் பெரிய நரேனைத்தான் (விவேகானந்தர்) மிகவும் பிடிக்கும். ஆகவே ஜூனியர் நரேனின் வீட்டிற்கு நான் போக விரும்பவில்லை'' என்றான்.

கோபம் வந்ததே பார்க்கலாம் பரமஹம்சருக்கு. ''பயலே! ஏன் ஒரு பக்கமுள்ளவனாக இருக்கிறாய்? கீழ்த்தரமான மனிதன்தான் ஒரு பக்கமாகவே சாய்வான். கடவு

ளின் கையிலுள்ள கூடையில் பலவித அழகிய புஷ்பங்கள் உள்ளன. அவருக்குப் பல வகையான பக்தர்கள் இருக்கிறார்கள். எல்லாப் பக்தர்களிடமும் கலந்து பழக முடியாத வனுடைய மனம் அவனுடைய மட்டமான புத்தியைத்தான் பிரதிபலிக்கிறது. அனைவருடனும் சேர்ந்து உயர்ந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கற்றுக்கொள். ஒரு முறை ஜூனியர் நரேனை அவனுடைய வீட்டிற்குச் சென்று பார்த்து அவனுடன் பேசு, என்ன?" என்று பரமஹம்சர் அந்த இளைஞனிடம் சற்றுக் கடிந்து சொல்லவும், வேறு வழியின்றி அவன் "சரி" என்று ஒப்புக்கொண்டான்.

சில தினங்களில் ஜூனியர் நரேனின் வீட்டிற்குச் சென்று பல விஷயங்களைக் குறித்துப் பேசிவிட்டுத் திரும்பிய அந்த இளைஞன் மிகவும் மகிழ்ச்சியுடன், "என் வாழ்க்கையில் மிகச் சிக்கலான ஒரு பெரிய பிரச்னைக்கு இன்று ஒரு முடிவு ஏற்பட்டது. நான் ஜூனியர் நரேனின் வீட்டிற்குச் சென்று அவனுடன் பேசியது எவ்வளவு நல்லதென்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. நான் பாக்கியசாலி; மிகவும் கொடுத்து வைத்தவன்" என்று ஸ்ரீராமகிருஷ்ணரை மனதிற்குள் வணங்கினான். *

சொர்க்கமும் நரகமும்

திருமதி சரோஜா சிம்ஹன்

வயோதிகப் பாதிரியார் ஒருவர் இறந்து போகும் தறுவாயில் இருந்தார். எண்பத்துநான்கு வயது நிரம்பிய அந்தப் பெரியவர், தமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தார். அப்போது அவருக்குச் சொர்க்கம், நரகம் ஆகியவை பற்றிய கவலை ஏற்பட்டது. ஆயுள் முழுவதும் அந்த இரண்டு இடங்களைப் பற்றியே மக்களுக்குப் போதித்து வந்த அவருக்கு அவை எப்படி இருக்கும் என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் பாதிரியாரின் ஆவி பிரிந்தது. அவருடைய ஆவியை அழைத்துப் போக மோஸஸ், பீட்டர் ஆகிய இருவரும் வந்தனர். அவர்கள் சொர்க்கத்தையும் நரகத்தையும் பாதிரியாருக்குக் காண்பிப்பதாகக் கூறினார்கள். பாதிரியார் அவர்களைத் தொடர்ந்து சென்றார்.

முதலில் மூவரும் நரகத்தில் உள்ள சாத்தானின் மாளிகைக்குச் சென்றனர். அங்கு ஒரு பெரிய மேஜை இருந்தது. அந்த மேஜையின் நடுவில் ஒரு பெரிய பாத்திரத்தில் உணவு வகைகள் வைத்திருந்தன. மேஜையைச் சுற்றி நின்றுகொண்டிருந்த மனிதர்கள் வாடிய முகத்துடன் 'பசி, பசி' என்று கூவிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் கையில் மிக நீளமான பிடியுள்ள கரண்டியை வைத்திருந்தார்கள். கரண்டியால் உணவை எடுக்க முடிந்ததே தவிர, அதை மடக்கி வாயின் அருகில் திருப்ப முடியாததால் அவதிப்பட்டனர்; அழுதனர்.

அடுத்து, பாதிரியாரின் ஆவி சொர்க்கத்தில் உள்ள மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. அங்கும் முதல் மாளிகையில் பார்த்ததைப் போலவே பெரிய மேஜையின் நடுவில் உணவும், சுற்றி அமர்ந்திருந்தவர்களின் கைகளில் நீளமான பிடியுள்ள கரண்டியும் இருந்ததைப் பாதிரியார் கவனித்தார். ஆனால் இங்கே பசியின் கூவலோ அழுகையோ இல்லாமல் அனைவரும் ஆனந்தமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருவர் தம் கரண்டியால் எதிரே உள்ளவருக்கு ஊட்டுவதும் அவர் இவருக்கு ஊட்டுவதுமாகச் செய்துகொண்டதனால் சொர்க்கத்தில் இருந்த அனைவருடைய வயிறும் நிறைந்தது.

வாரியார் கண்ட 'சிரோன்மணி'

ஒரு நாகப்பாம்பு இருநூறு முட்டை இடும். அதில் நூற்றெண்பது முட்டைகளைத் தானே விழுங்கிவிடும். மீதமுள்ள இருபது முட்டைகளில் பன்னிரண்டு முட்டைகளே குஞ்சாக மாறும். இப்படி மாறிய குஞ்சுகளுக்குச் சூரிய வெளிச்சத்தின் மூலம் நஞ்சு ஏற்படும். இந்த நஞ்சு ஏற்பட்டதும் அவை தம்மைத் தாமே காத்துக்கொள்ளும் என்று தாய்நாகம் சென்று விடும். இவ்விதம் நஞ்சுடன் கூடிய ஒரு நாகம் யாரையும் கடிக்காமல் ஆயிரம் ஆண்டுகள் நஞ்சைக் காத்தால் அந்த நஞ்சுதான் நாகமணியாக மாறும். இந்தக் கதையை நான் சொல்லவில்லை. கம்பராமாயணப் பாடலில் இது இடம் பெற்றிருக்கிறது.

இப்படி நாகமணியைப் பெற்ற பாம்பிற்குக் கண் தெரியாமல் போய்விடும். அப்போது அது இந்த நாகமணியைக் கக்கி வெளியே வைத்துவிட்டு, அந்த வெளிச்சத்தில் அருகில் இரைதேடப் போகும். அப்போது அந்த நாகமணியின் மீது சாணத்தையோ மண்ணையோ போட்டு மூடிவிட்டால், அந்தப் பாம்பு கண் தெரியாமல் அலறி அடித்துக்கொண்டு இறந்து விடும்.

அதுபோல் ஒரு மனிதன் அறுபது ஆண்டுகள் பிரம்மசரிய விரதம் இருந்து விந்தை வெளியிடாமல் இருந்தால், அந்த விந்து மேல்நோக்கிச் சென்று புருவமத்தியில் நிலைகொண்டு சிரோன்மணியாக மாறும். அப்படி மாறிய சிரோன்மணி அந்த மனிதன் முக்தி அடையும்போது கபாலம் வெடித்து வெளியே வந்து விழும்.

இப்போது நான் சொல்வது உண்மைக் கதை: நான் நேபாள யாத்திரை சென்றிருந்தபோது ஒரு மகானைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அவர் கழுத்தில் இருந்த ஒரு மணியைப் பார்த்து, "அது என்ன என்று நான் தெரிந்துகொள்ளலாமா?" என்றேன்.

அவர் அதைக் கழற்றி, "நீயே என்னது என்று சொல்" என்று என்னிடம் கொடுத்தார்.

நான் வாங்கிப் பார்த்துவிட்டு, "எனக்குத் தெரியாததால் ஸ்வாமி சொன்னால் தெரிந்துகொள்கிறேன்" என்றேன்.

பெரியவர்களின் கேள்விக்குப் பதில் சொல்லும் போது தெரியாது என்றோ, இல்லை என்றோ சொல்லக்கூடாது. 'உனக்குக் குழந்தை உண்டா?' என்றால், 'இனிமேல்தான் முருகன் அருளால் பிறக்க வேண்டும்' என்று சொல்ல வேண்டும். 'சொந்த வீடு இருக்கிறதா?' என்றால், 'இனிமேல்தான் வாங்க வேண்டும்' என்று சொல்ல வேண்டும்.

அந்த முறையில் நான் பதில் சொன்னதும் அந்த மகான் தமது குருநாதர் விந்தை அடக்கிய பிரம்மசாரி என்றும், அவர் மகாசமாதி நிலை அடைந்த சமயத்தில் கபாலம் வெடித்துக் கிடைத்த மணியே அது என்றும், அந்த மணியைத்தான் சிரோன்மணி என்று சொல்வார்கள் என்றும் கூறினார்.

அந்த மணியைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

—தஞ்சைப் பெரிய கோவிலில் ராஜராஜ சமய சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கம்பராமாயணத் தொடர்ச் சொற்பொழிவில், 17-5-78ஆம் நாள் திருமுருக கிருபானந்தவாரியார் கூறியது.

அன்பைக் கடன் கொடு. உனக்கு அதிக வட்டியுடன் அது திரும்பக் கிடைக்கும்.

—ஓர் அறிஞர்

இனிய மொழி பேசுவதனால் எல்லாரும் நம்மிடம் மலர்ச்சியாக இருக்கிறார்கள். நாமும் மலர்ச்சியாக இருக்கிறோம்.

—கபீர்தாசர்



ஏழைக் குழந்தைகள் வயது முதிர்ந்தவர்களைப் போல் பேசுவார்கள்.

—ராஜாஜி

உள்ளொன்று புறமொன்று இல்லாது இருந்தாலன்றி, களங்கமற்ற நேர்மை இருந்தாலன்றிக் கடவுளை அறிந்துணர முடியாது.

—எபிரேயம்

சுவாமி இராமகிருஷ்ணனந்தரின் போதனைகள்



கடவுள் என்று நினைக்கும்போது எல்லா வகைகளிலும் அளவுக்கு உட்படாத ஒரு பொருளையே நினைக்கிறோம். அந்தப் பொருள் எல்லையற்ற சக்தி வாய்ந்தது. எல்லையற்ற அன்பு கொண்டது. எல்லையற்ற சைதன்யம் மிக்கது. இவ்விதம் அந்தப் பொருள் எல்லையற்று விளங்குவதால் ஒருபோதும் அது எல்லைக்கு உட்பட்டதாக இருப்பது முடியாது.

மனதின் எல்லாப் பக்கங்களிலும் அஞ்ஞானம் சூழ்ந்திருப்பதனால் அஞ்ஞானத்திலேயே அது கட்டுண்டு கிடக்கிறது. உன் ஞானத்தையும் உன்னிடமுள்ள அஞ்ஞானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாயானல், உன் ஞானம் வெகு அற்ப அளவினதாக இருப்பது புலப்படும். வரையறைக்கு உட்பட்ட ஒரு பொருள் வரையறைகளுக்கே உட்படாத பொருளை உள்ளபடியே உணர்ந்துகொள்வது இயலாத காரியம்.

'நாகப்பாம்பின் விஷம் மிகமிகக் கொடியதுதான். ஆனல் அந்த விஷம் பாம்புக்குக் கெடுதல் எதுவும் செய்வதில்லை' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம். அது போலவே மாயையும் கடவுளுக்கு உள்ளேதான் இருக்கிறது. ஆனல் பாம்பின் விஷம் பாம்புக்கே கெடுதல் செய்ய முடியாமல் இருப்பதைப் போலவே, மாயையும் கடவுளின் சொரூபத்தைப் பாதிக்க முடியாது. கடவுள் சிருஷ்டிகர்த்தாவாக நாடகம் நடிக்கிறார். படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய லீலைகளைப் புரிவதற்காகவே அவர் அவ்விதம் நடிக்கிறார். அவர் சிருஷ்டித் தொழிலில் ஈடுபட விரும்பும் போதெல்லாம் பின்பற்றும் முறை இதுவே ஆகும். இதுவே கடவுளுக்கும் மாயைக்கும் உள்ள சம்பந்தமாகும். கடவுள் எல்லையற்ற ஆற்றல்களைப் படைத்தவர். ஆகவே மாயையின் அடக்க முடியாத சக்தியையும் அடக்கி ஒடுக்கும் ஆற்றலை அவர் பெற்றிருக்கிறார்.

ஆனல், மாயைக்கும் நமக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது தெரியுமா? நாம் மாயைக்கு அடிமைகளாக இருக்கிறோம். ஆத்ம சொரூபமாகிய நம்மை மாயையால் உண்மையில் அழிக்க முடியாதுதான். ஆனல், காலமெல்லாம் நம்மைத் துயரத்தில் உழலும்படி செய்ய மாயைக்கு இயலும். அப்படியானல் நாம் மாயையிலிருந்து விடுபடுவதுதான் எப்படி? இறைவனின் திருவருளைத் துணையாகக் கொண்டு மட்டுமே நாம் மாயையை ஒழிக்கலாம் என்று எதிர்பார்க்க முடியும்.

நீ நித்தியமானவன், அழியாதவன். ஆகவே நீ உடல் அல்ல, ஆத்மா உன் சொரூபம். ஆத்மாவோ மாயையின் ஆதிக்கத்திற்கும் அப்பாற்பட்டு விளங்குவது. ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே—இவற்றையெல்லாம் உறுதியாக அறிந்துகொள்வாயாக. 'நான் ஆத்மா' என்ற உணர்வு உனக்கு இருக்குமானல், உன் பொய்யான 'நான்' 'எனது' என்பவற்றை நீ நீக்கிவிட இயலுமானல், மாயையின் ராஜ்யத்துக்கும் அப்பால் நீ சென்றுவிடலாம். இந்த நெறி ஞானமார்க்கம் எனப்படும்.

ஸ்தூல உடலின் அற்பக் கோரிக்கைகளை எல்லாம் நாம் எதிர்த்து நிற்க வேண்டும். அவ்விதம் செய்தோமானல், மாயையை எதிர்த்து நாம் இடைவிடாமல் போர் புரிவது சாத்தியமாகும். வெற்றியும் நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். ஆனல் இவ்விதம் வெற்றி பெறுபவர் மிகமிகச் சிலரே ஆவர். மற்றவர் அனைவரும் பகவானின் தாமரைத் திருவடிகளில் சரணமடைவதையே செய்ய வேண்டும்.

எந்த வகையான பக்தி கடவுளிடம் நம்மை அழைத்துச் செல்கிறது? அது, குழந்தை தன் தாயிடம் கொண்டுள்ள ஈடுபாட்டைப் போன்ற பக்தி ஆகும். குழந்தை ஏன் தாயை நாடிச் செல்கிறது? அந்தக் குழந்தை தனக்கு விருப்பமானவர்களிலேயே மிகமிக விருப்பமானவள் தன் தாய்தான் என்று அந்தரங்க உள்ளத்தில் உணர்ந்திருக்கிறது.

பக்தன் ஏன் கடவுளை நாடிச் செல்கிறான்? 'பகவானே எனக்கு உதவுவார். வேறு யாராலும் எனக்கு உதவ முடியாது' என்று பக்தனும் முன்னதாகவே யோசித்துத் தீர்மானித்திருக்கிறான். எனவே குழந்தை தாயிடம் செல்வது போலவே பக்தனும் இறைவனிடம் செல்கிறான்.

ஜீவர்களுக்குச் சுதந்திரம் இல்லை. தங்களைச் சரியான வழியில் அழைத்துச் செல்லவும் அவர்களுக்குத் தெரிவதில்லை. ஏனெனில், அவர்களின் மனம் கட்டுண்டதாகவும் எல்லைக்கு உட்பட்டதாகவும் இருக்கிறது. ஆகவே ஜீவர்கள் பகவானால் வழிகாட்டப்படுவதற்கு இணங்க வேண்டும். கடவுளே சர்வசக்தி வாய்ந்த, சர்வஞானம் படைத்த பிரபு ஆவார். மரணத்திலிருந்தும் கணக்கற்ற துயரங்களிலிருந்தும் நாம் தப்ப வேண்டுமானால் கடவுளால் வழிகாட்டிச் செல்லப்படுவதுதான் சிறந்த வழியாகும். நமக்கு நாமே வழிகாட்டிச் செல்வதை விட்டுக் கடவுளால் வழிகாட்டப்படும் வகையை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்த புத்திசாலித்தனமாகும்.

கடவுளிடம் உண்மையான அன்பு இல்லாத எவனும் மதவாழ்க்கையில் ஈடுபட்டவனாக இருக்க இயலாது. உலகத்தின் கவர்ச்சியைக்காட்டிலும் கடவுளின் கவர்ச்சியால் ஒருவன் அதிகமாக ஈர்க்கப்படும்போதுதான் ஆன்மிக வாழ்க்கை அவனிடம் துவங்குகிறது.

உலகத்தின் மீதுள்ள பற்று அகங்காரத்தைக் குறிக்கும். கடவுளின் மீதுள்ள பற்று ஆத்மசமர்ப்பணத்தைக் குறிக்கும்.

நம்மில் வெகு சிலர்தாம் உண்மையிலே சதா சர்வகாலமும் கடவுளை நம்பி வாழ்கிறோம். இதை எப்படி அறிய முடியும்? நமது உள்ளத்திலே கவலைகளும் அச்சங்களும் எழுவதற்கு நாம் இடம் அளிப்பதனால் இதை அறியலாம். கடவுளின் எல்லையற்ற அன்பிலும் ஆற்றலிலும் நமக்கு உண்மையிலேயே நம்பிக்கை இருக்குமானால் எதைப் பற்றியும் நாம் பயப்படவே மாட்டோம்.

மனதை அசுத்தப்படுத்துவது எது? ஆசைதான். எல்லா ஆசைகளிலிருந்தும் மனதை விடுவித்துவிடு. உடனே மனம் தூய்மை பெற்றுவிடும் ஆனால் கடவுளைப் பற்றிய சிந்தனையே இல்லாதவனால் ஒரு நாளும் ஆசையை ஒழிக்க முடியாது. ஆசைகள் இன்பத்தைத் தருவதற்குப் பதிலாக, எல்லாவிதத் துன்பங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமே ஆகின்றன என்பதை முதல்தரமான பக்தன் நன்கு அறிகிறான். இறைவனிடம் மட்டுமே எல்லா விதமான ஆசைகளுக்கும் முழுமையான திருப்தியைக் காண முடியும் என்பதை அந்தப் பக்தன் உணர்ந்திருக்கிறான். பகவான் எல்லையற்ற, அகண்டமான ஆனந்தமயமாக விளங்குகிறார். மற்ற எல்லாவித இன்பங்களுமே வரையறைகளுக்கு உட்பட்டவையாகவும் அழிந்துபோகும் தன்மை கொண்டவையாகவுமே இருக்கின்றன.



ஒருவன் மனதில் நிமிஷத்துக்கு நிமிஷம் தோன்றி மறையும் தோற்றங்கள் எல்லாம் தியானமாகமாட்டா. புதர்க் கூட்டத்தில் தீப் பிடித்தாற்போல, மனதிலுள்ள மற்றக் கவலைகளையும் எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியாக விளங்கும் விருப்பத்தைத் தியானம் என்கிறோம்.

—பாரதியார்

வைத்தியனது பேச்சைக் கேளாமற் போனால் எப்படி உடல் கெடுமோ அப்படியே, நல்ல ஞானி ஒருவரின் சொல்லைக் கேளாமல் பலர் சொல்லைக் கேட்டுப் பயந்தும் நயந்தும் நடந்தால் நமது ஆத்மாவுக்குத் தீங்கு நேரிடும்.

—ஸோக்ரதர்

நம்முடைய நடத்தை, நம்மினும் உயர்ந்தோர், நம்மினும் தாழ்ந்தோர், நமக்குச் சமமானவர் ஆகிய மூன்று வகையான மக்களிடமும் பொருத்தமாக இருக்கும்படி அமைய வேண்டும். இது நற்பயிற்சியில் முக்கியமான ஒரு விஷயம்.

—ஸ்விப்ட்

சிறுவர் பகுதி:



மாலை மரியாதை

ஆர். சக்திதரன்

''குழந்தாய், இன்று ஏன் இவ்வளவு வருத்தமாக இருக்கிறாய்? பாலுங்கூடக் குடிக்கவில்லையே?'' என்று கேட்டாள் லக்ஷ்மி. ஆம், அதுதான் அந்தப் பசுவின் பெயர்.

“அம்மா, அதோ அந்த வெள்ளாட்டுக் குட்டியைப் பார். கன்னங் கரேல் என்று இருக்கிறது. என்னைவிடச் சிறியது, சோம்பேறி. ஆனால் நம் எஜமானின் மகன் அதை எவ்வளவு நேசிக்கிறான்! அதற்குத் தின்னப் பசும் புல்லும் பக்ஷணங்களும் தன் கையாலேயே கொடுக்கிறான்; அன்பாக அழைக்கிறான். அந்தக் குட்டியின் கழுத்தில் அழகான மணிகளைக் கட்டியிருக்கிறான். அதன் கொம்புகளுக்குத் தினமும் எண்ணெய் தடவுகிறான். ஆனால் துரதிர்ஷ்டம் பிடித்த என்னைப் பார்; ஏனென்று கேட்பாரில்லை; காய்ந்த வைக்கோலைக்கூட என்முன் எடுத்துப் போடுவாரில்லை. நாக்கு உலர்ந்தாலும் தண்ணீர் கொடுப்பாரில்லை. நான்தான் கேட்கிறேன், அப்படி என்னதான் என்னிடம் குறை இருக்கிறது?'' என்று தாயிடம் புலம்பித் தீர்த்தது கன்றுக்குட்டி.


“மகனே, வீணாக வருத்தப்படாதே. இந்த உலகமே இப்படித்தான். இங்கு அதிகச் சுகமும் அதிக மரியாதையும் பெறுவது மிகவும் அச்சத்திற்கு உரியது. உலக சுகங்களுக்குப் பின்னால் நோய், கவலை, வீழ்ச்சி, மரணம் ஆகிய அனைத்தும் மறைந்துள்ளன. பிறருடைய சுகபோகங்களைக் கண்டு வீணில் பொறாமைப்படாதே. சாகப்போகிறவனுக்கு அவன் விரும்புவதை எல்லாம் கொடுத்துத் திருப்திப் படுத்துவதைப் போன்றதுதான் இந்த உபசாரமெல்லாம். பாவம்! இந்த ஆடு மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதைக் கொல்லுவதற்காகவே ஊட்டம் கொடுத்துப் புஷ்டியாக்குகிறார்கள். நமக்கு இந்தக் காய்ந்த வைக்கோலே கிடைத்தால் போதும்'' என்றாள் அன்னை லக்ஷ்மி.

மாதங்கள் சில கழிந்தன. ஒரு நாள் மாலைப் பொழுது, லக்ஷ்மி வெளியில் சென்று மேய்ந்துவிட்டு வீடு திரும்பினாள். மடி கனத்தது; ஓடினாள் தன் கன்றை நோக்கி. ஆனால் கன்றோ பயத்தால் நடுநடுங்கிக் கொண்டிருந்தது. 'அம்மா' என்று அழைக்கவுமில்லை, துள்ளிக் குதித்து வரவுமில்லை. சுவரோடு சுவராக ஒட்டிப் பயந்து நின்று கொண்டிருந்தது. அன்னை லக்ஷ்மி பதறிவிட்டாள். அருகில் ஒரே பாய்ச்சலில் சென்றாள்; நாவால் நக்கிக் கொண்டே கேட்டாள் : ''மகனே, இன்று ஏன் இவ்வளவு பயந்து நடுநடுங்கிக் கொண்டிருக்கிறாய்?''

“அம்மா, இன்று அந்த ஆட்டிற்கு மாலை எல்லாம் போட்டு அலங்காரம் செய்தார்கள்; ஏதோ தின்னக் கொடுத்தார்கள்; அன்பாகத் தடவிக் கொடுத்தார்கள். சிறிது

நேரத்திற்கெல்லாம் பெரிய மீசைக்காரன் ஒருவன் வந்தான். கத்தியால் ஒரே வீச்சில் அதன் தலையைத் துண்டித்துவிட்டான். ஒரு பெரிய அலறல். சிறிது நேரம் அந்த ஆட்டின் கால்கள் துடிதுடித்தன. பிறகு அதுவும் அடங்கிவிட்டது. அந்தக் கொலைபாதகர்கள் அதன் உடம்பையும் துண்டு துண்டாக வெட்டிவிட்டார்கள். அதோ பார், அந்த இடத்தில் இன்னும் இரத்தம் உறைந்து கிடக்கிறது. இதைப் பார்த்தது முதல் நான் பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று திக்கித் திணறிக் கன்று கூறியது.

''குழந்தாய், உலக சுகங்கள், பேர் புகழ், மாலை மரியாதைகள் ஆகியவற்றிடம் எப்போதுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நான் முன்னமே உனக்குச் சொல்லவில்லையா? இவற்றுக்குப் பின்னாலேயே நோய், கவலை, வீழ்ச்சி, அழிவு அனைத்தும் பதுங்கிப் பதுங்கி வருகின்றன'' என்று பரிவுடன் கூறி, அன்னை லக்ஷ்மி பயத்தைப் போக்கிப் பாராட்டினாள். ●



கர்மயோகம்

பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

ஒரு சமயம் காசியில் ஹனுமான் கட்டத்தின் வழியாக இரண்டு இளைஞர்கள் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் இரண்டு இளம் பெண்கள் தண்ணீரில் மூழ்கும் நிலையில் இருந்ததைக் கண்டனர். இதைக் கண்டவுடனே இரண்டு இளைஞர்களும் தண்ணீரில் குதித்தனர். மூழ்கும் தருவாயில் இருந்த பெண்கள் இருவரையும் காப்பாற்றிக் கரையேற்றினர்.

காப்பாற்றப்பட்ட பெண்கள் இருவரும் இளைஞர்களுக்குத் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஒருவன் தான் காப்பாற்றிய பெண்ணிடம் தன்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி வேண்டினான். அவன், 'இந்த உலகமே உண்மை' என்ற மனப்பான்மை கொண்டவன்.

மற்றொருவன், தன்னைவிட வயதில் முதிர்ந்த பெண்களைத் தாயாகவும் சமவயதுடையவர்களைச் சகோதரிகளாகவும் சிறுமிகளைத் தன் புதல்வியராகவும் பாவித்து வாழ்ந்து பழகியவன். ஆகவே அவன், ''சகோதரி, ஒரு நல்ல காரியத்தைச் செய்ய இறைவர் எனக்கு வாய்ப்புக் கொடுத்தார். நான் கடமையைச் செய்து முடித்தேன்'' என்று தன்னால் காப்பாற்றப்பட்ட பெண்ணிடம் தெரிவித்தான். அவன் 'இறைவன் மட்டுமே உண்மை' என்ற மனப்பான்மை கொண்டவன்.

புறத்தளவில் இரண்டு இளைஞர்களும் ஓர் உயிரைக் காப்பாற்றுவது என்னும் ஒரேவிதமான செயலையே செய்தனர். ஆனால் மனப்பான்மையில் இருவரும் வேறுபட்டனர். அது காரணமாகப் பலனும் வெவ்வேறாகவே அமைந்தது.

பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயல் பந்தத்துக்கு வழி வகுக்கும். தன்னை இறைவனின் கருவியாகப் பாவித்துச் செயல் புரிவதும் அதன் பலனை இறைவனுக்கு அர்ப்பிப்பதும் ஆன்ம விடுதலைக்கு வழி வகுக்கும். மேலும், ஆன்மிக வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவர்களால் மட்டுமே தூய முறையில் உலகிற்குத் தொண்டாற்ற இயலும். அவ்விதம் இல்லாத நிலையில் சுயநலம் புகுவதைத் தவிர்ப்பதற்கில்லை.

''கர்மம் செய்வதற்கு மட்டுமே உனக்கு அதிகாரம் உண்டு. கர்மத்தின் பயனில் ஒருபோதும் உரிமை பாராட்டாதே. பயனைக் கருதிக் கர்மம் செய்பவனாக இராதே. செயலின்மையில் உனக்கு விருப்பமும் ஏற்பட வேண்டாம்.''

—கீதை, 2-47

''படகு நீரில் மிதக்கலாம். ஆனால் படகுக்குள் நீர் நுழைந்துவிடக் கூடாது. அது போல, மனிதன் உலகில் வாழலாம். ஆனால் உலக ஆசை அவன் உள்ளத்தில் நுழைந்துவிடக் கூடாது.''

—ஸ்ரீராமகிருஷ்ணர்

கடவுளைக் காட்டும் பாதைகள்



ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தர்
தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் — சங்கம்

நம் முற்கால மகான்கள் கடவுளை உணர்ந்தறிவது என்ற கொள்கையை நம் வாழ்க்கையின் இலட்சியமாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் இந்த இலட்சியத்தை நம் முன் வைத்த காரணத்தால், நாம் நம் துன்பங்களுக்கு ஒரு முடிவைக் கட்டி, நம்முடைய உண்மையான தெய்விக இயல்பை உணர்ந்து கடவுளைக் கண்டு பேரின்பம் பெற்றவர்களாக ஆகிக்கொண்டிருக்கிறோம்.

கடவுளைக் கண்டு உணர்வது என்ற இந்தக் கொள்கை, இந்த நாட்டில் பெரிய மகான்களைத் தன்னிடம் கவர்ந்து ஈர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் பெரிய பெரிய மன்னர்கள், ஆற்றல் மிக்க இளவரசர்கள், சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அத்தனை பேரும் அந்தக் கொள்கையால் கவரப்பட்டுத் தமது நாட்டையும் சுகபோகங்களையும் கடவுளைக் கண்டு உணர்வதற்காகத் தூக்கி எறிந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்றால், இந்த உலகத்தில் எதுவுமே நிலையில்லை; எல்லாமே அழிந்துகொண்டிருக்கின்றன; கடவுள் ஒருவர் மட்டுமே அழியாமல் இருக்கிறார் என்பதை அவர்கள் கண்டுகொண்டதனால்தான். அழியாப் பொருளை அடைய, அழியும் பொருள் அனைத்தையும் அவர்கள் துறந்து சென்றார்கள்.

உலகைப்பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர்

ஸ்ரீராமகிருஷ்ணர், 'இந்த உலகம் மட்டும் நிலையானது என்று எனக்குத் தெரிந்திருந்தால் என் சொந்த ஊரான காமார்ப்புகுரை நான் தங்கத்தாலேயே இழைத்திருப்பேன்' என்று அடிக்கடி கூறுவார். இந்த நேரத்தில் மிகுந்த சுகபோகத்திலும் அதிகாரம் நிறைந்த வாழ்விலும் இருந்த ஒருவர் ஒரு விநாடியில் அவற்றைத் துறந்து சன்னியாசியான நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வங்காளத்தில் தோன்றிய அவதாரபுருஷர் சைதன்ய மகாப் பிரபு. அவருடைய மிகச் சிறந்த பக்தரான ரூபகோஸ்வாமி பிருந்தாவனத்தில் தவசியாக வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் வங்காள நவாபிடம் பிரதம மந்திரியாக இருந்துகொண்டு மிகுந்த ஆடம்பரத்தோடும் அதிகாரத்தோடும் வாழ்ந்து வந்தார். அந்தத் தம்பியிடம் ரூபகோஸ்வாமிக்கு அன்பு அதிகம். இறைவனின் இன்பத்தில் ஆரக் குளித்த அவர் நிலையற்ற உலக இன்பத்தில் தம் தம்பி மூழ்கிக் கிடந்ததைக் கண்டு, அவரிடம் கருணை கொண்டார். ஒரு நாள் அவருக்குச் சம்ஸ்கிருதத்தில் ஒரு சிறிய பாட்டை எழுதி அனுப்பினார்.

அயோத்தியும் துவாரகையும் எங்கே?

அந்தப் பாடலின் கருத்து: 'நாடு அரசு, ஆட்சி ஆடம்பரம் என்று நினைத்துக்கொண்டு அதிலேயே மூழ்கிவிட்ட தம்பியே! கொஞ்சம் நினைத்துப் பார்! உலகமே தொழுகிற நிலையில் இருந்த இராமரும் கிருஷ்ணரும் ஆண்ட அயோத்தியும் துவாரகையும் இப்போது என்ன ஆயின? கடவுளைத் தவிர உலகில் நிலையானது எதுவும் இல்லை. நன்றாக நினைவில் வைத்துக் கொள்' என்று இருந்தது. இதைப் படித்ததும் கோஸ்வாமி தம்பியின் ஆன்மிகக் கண்கள் திறந்தன. உடனே பிரதம மந்திரிப் பதவியைத் துறந்தார்; சன்னியாசியாகிக் கடவுளைக் காணத் தவம் செய்யப் பிருந்தாவனம் வந்துவிட்டார். இப்படிக் கடவுளைக் கண்டு உணர்வது என்ற கொள்கை எப்போதுமே நம் நாட்டவரின் மனதைக் கவர்ந்து இழுத்தவண்ணமே இருக்கிறது.

உலக வாழ்வில் கிடைக்காது

பகவான் கிருஷ்ணர் கீதையில், "மாறிக் கொண்டே இருக்கிற, மகிழ்ச்சியே இல்லாத இந்த உலகத்திற்கு வந்துவிட்ட நீங்கள், நிலையான மகிழ்ச்சியை அடைய என்னை எப்போதும் தொழுது

கொண்டே இருங்கள்"[1] என்று கூறுகிறார். எனவே நம் சாஸ்திரங்கள், முற்கால முனிவர்கள், அவதார புருஷர்கள், ஆசாரியர்கள் ஆகிய எல்லோருமே நம்மை இந்த உலக வாழ்வில் மூழ்கி, அதன்மூலம் அமைதியும் இன்பமும் காணுங்கள் என்று கூற வில்லை. 'நிலையற்ற பொருள்களில் ஆசை கொண்டு உலக வாழ்க்கையில் உழலாமல், நம்முடைய உண்மையான பேரின்ப இயல்பை உணர்ந்து அதை அடைய முயலுங்கள்' என்றே கூறியிருக்கிறார்கள். ஆசைமயமான உலக வாழ்க்கையில் மூழ்குவதால் பேரின்ப அமைதி எப்பொழுதுமே கிடைக்காது.

நாமே சத்-சித் ஆனந்தம்

நம் வாழ்வின் இலட்சியம் கடவுளை அடைவது என்று கூறும் மகான்கள், நம்முடைய உண்மையான இயல்பு சத்-சித்-ஆனந்தம்[2] என்று கூறுகிறார்கள். நாம் இத்தகைய இயல்பை உடையவர்கள். ஆனால் இதனை நாம் மறந்துவிட்டோம். மறந்துவிட்ட காரணத்தினால்தான் துன்பப்பட்டுக் கொண்டிருக் கிறோம்.

நம்முடைய மகான்களும் நம் சாஸ்திரங்களும் நாம் சத்-சித்-ஆனந்தமயமானவர் என்று பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் நாம் அத்தகைய வர்கள் என்பதை அறிவுபூர்வமாக நம்மால் உணர முடியுமா? உணர முடியும். ஞானத்தின் மூலமாக நாம் சத்-சித்-ஆனந்தமயமானவர்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடியும்; அறிவுபூர்வமாகவும் நாம் இதை உணர்ந்துகொள்ளலாம்.

தண்ணீரைப் பிரிந்த மீன் ஏன் துடிக்கிறது?

உதாரணமாக, நாம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக் குள்ளாகவே வாழ்ந்து அதிலேயே பழக்கப்பட்டு விடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். பிறகு அந்தச் சூழ்நிலையிலிருந்து பிரித்து நாம் ஒரு புதிய சூழ்நிலையில் வைக்கப்படுகிறோம் என்றால் அந்தப் புதிய சூழ்நிலையில் நாம் மிகவும் வேதனைப்படுவோம்; நம் பழைய சூழ்நிலைக்குத் திரும்புவதற்காக எப் போதும் போராடுவோம்.

உதாரணமாக, ஒரு மீனைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் கரையில் போடுவோமேயானால், அது மறு படியும் தண்ணீருக்குள் போவதற்காகவே துடிக் கிறது. இது ஏனென்றால் தண்ணீர் அதன் இயல் பான சூழ்நிலை.

அது போலவே வெளிச்சத்தில் இருக்கும் ஒரு கொடியைக் கொண்டு போய் நீங்கள் நிழலில் வையுங்கள். கொஞ்ச நாள் கழித்து அந்தக் கொடியைப் பார்த்தால் அது சூரிய ஒளி வரும் திசையை நோக்கித் தவழ்ந்து செல்வதைக் காண லாம். இது ஏன் என்றால் சூரிய ஒளி கொடியின் உயிர்.

இது போன்றதே நம் நிலையும். நாம் எப் போதும் வாழ்க்கையில் இன்பம் வேண்டும், இன்பம் வேண்டும் என்று ஏன் துடிக்கிறோம், ஏன் போராடு கிறோம் என்றால், நம்முடைய உண்மையான இயல்பு எப்போதும் பேரின்ப மயமாக இருப்பதனால் தான். இப்போதைய வாழ்வில் நாம் அதை இழந்து விட்டோம். அதனால்தான் நிலையான இன்பத்தை, பழைய இயல்பான அந்த இன்பத்தை அடையப் போராடுகிறோம்.

நாம் ஏன் சாவை வெறுக்கிறோம்?

நம் மனதை ஆழமாக ஆராய்ந்து பார்த்தோ மானால் சாவதை நாம் எவ்வளவு வெறுக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். நாம் சாகாமல் நிலை யாக வாழவே விரும்புகிறோம். சாகாமல் வாழ வேண்டும் என்ற ஆசை ஏன் நம் மனதில் தோன்றி எப்போதும் நம்மை அலைக்கழித்துக் கொண்டிருக் கிறது? இது ஏனென்றால், நம்முடைய உண்மையான இயல்பு எப்பொழுதும் சாகாமல் எந்நாளும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஸத்சொருப நிலையாகும். அந்த ஸத்சொருபத்தை நாம் இப்போது இழந்து விட்டிருக்கிறோம். அதனால்தான் இழந்த பழைய மரணமில்லாத நிலையை அடைய நாம் தெரிந்தும் தெரியாமலும் முயலுகிறோம். அந்த முயற்சியின் அடிப்படைதான் நாம் மேற்கொள்ளும் பணம் தேடு வது, பாதுகாப்புத் தேடுவது, மருத்துவம் செய்து கொள்ளுவது முதலிய பல்வேறு செயல்களும்.

நாமே சித் சொருபம்

நம் மனம் எப்பொழுதும் எதைப் பற்றியாவது மேலும் மேலும் தெரிந்துகொள்ளவே ஆசைப்படு கிறது. நம்மில் யாரும் இப்போது தெரிந்துகொண் டிருக்கும் செய்தி மட்டும் போதும் என்று திருப்தி

1. கீதை 9, 33.

2. சத்-அழிவில்லாமல் நிலையாக இருப்பது. சித்-அறி யாமை படியாத அறிவுமயமானது. ஆனந்தம்-துன்பம் சிறிதும் கலவாத பேரின்பமயமானது.

யடைந்து விடுவதில்லை. மேலும் மேலும் தெரிந்து கொள்ளவே விரும்புகிறோம். இது எதைக் காட்டு கிறது என்றால், நாம் சித்சொரூபம் (அறிவுமயமான வர்கள்) என்பதைக் காட்டுகிறது. நம்முடைய இயல்பு, முழுமையான அறிவுமயம். அதனால் இந்த உலகத்தில் கிடைக்கும் அரைகுறைவான அறிவால் நம் மனம் திருப்தியடைய மறுக்கிறது.

ஆனந்தமயமானவர்கள்

அடுத்து நம்மைப்பற்றி நாம் ஆழமாகச் சிந்தித் தால் நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புகிறோம் என்பது தெரியும். நம்மில் யாரும் துன்பப்படுவதற்கு விரும்புவதில்லை. துன்பம், துயரம் என்றால் நாம் வெறுப்படைகிறோம். இது ஏன்? ஏனென்றால், நம்முடைய உண்மையான இயல்பு எப்போதும் மகிழ்ச்சியாக, ஆனந்தமாக இருப்பது. நம்முடைய சொரூபம் ஆனந்தசொரூபம். அந்த ஆனந்தசொரூபத்தை, கலப்பற்ற பேரின்பநிலையை நாம் இழந்துவிட்டோம். இழந்துவிட்ட அந்தப் பேரின்பத்தை இந்த வாழ்க்கையில் நாம் மீண்டும் பெறத் துடிக்கிறோம்.

இவ்வாறு நம்மைப்பற்றி நாம் செய்யும் ஆராய்ச்சி ஊகங்கள் மூலம் நம்முடைய உண்மையான இயல்பு சத்-சித்-ஆனந்தம் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

நாம் எப்படி இந்தச் சொர்க்கத்தை இழந்தோம்?

நம்முடைய உண்மையான இயல்பு சத்-சித்-ஆனந்தம் என்றால், அந்த இயல்பை நாம் எப்படி இழந்தோம்? அறியாமை காரணமாகத்தான் நாம் நம்முடைய உண்மையான இயல்பை இழந்துவிட் டோம் அந்த இழப்புக் காரணமாகவே வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். வாழ்க்கையில் நாம் நடத்துகிற அத்தனை போராட்டங்களும் முயற்சி களும் செயல்களும் நாம் இழந்த அந்தப் பேரின்ப நிலையைப் பெற நடத்துகிற போராட்டங்களே ஆகும்.

ஆனால் சில நேரங்களில் நமக்கு இருக்கும் அறியாமை காரணமாக, பழைய பேரின்ப நிலையை அடைகிற சரியான வழி தெரியாமல், தவறான முயற்சிகளிலும் செயல்களிலும் ஈடுபடுகிறோம். ஈடு பட்டு இப்போது இருக்கும் துன்பத்திலிருந்து விடு படுவதற்குப் பதிலாக மேலும் அதிகமான துன்பத் தில், உலக விவகாரங்களில் சிக்கிக்கொண்டுவிடு கிறோம். எனவே பின்னும் அதிகமான துன்பத்தை அனுபவிக்கிறோம்.

நாம் இப்பொழுது நம்முடைய உண்மையான இயல்பு எது என்பதை மட்டும் புரிந்துகொண்டால், அதாவது நம் இயல்பை நாம் காண முடியாதவாறு மறைத்திருக்கும் அறியாமையிலிருந்து நாம் விடுபடு வோமேயானால், நம்மைப் பிடித்திருக்கும் எல்லாத் துன்பங்களும் நீங்கிவிடும். நாம் பேரின்பமயமான வர்களாக ஆகிவிடுவோம்.

[தொடரும்]

உன்னை மெய்யனுக்கிக்கொள். அப்போது உலகில் ஒரு துன்மார்க்கன் குறைந்தான் என்று நீ நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம்.

—கார்லைல்



நாமகீர்த்தனம் என்றால், பகவானுடைய நாமகீர்த்தனம் மட்டுமல்ல; பாகவதர்களின் நாமகீர்த்தனங்களும் அவசியமானவை. பகவானுடைய நாமகீர்த்தனங்களில் உண்டாகும் பிரியம், பாகவதர் களின் நாமகீர்த்தனங்களிலும் இருக்க வேண்டும்.

—இராமானுஜர்

எதற்காகவும் பெருமைப்படாதே. எல்லாம் ஒரு கணத்தில்அழிவனவே. யாவற்றையும் துறந்து, பரமனிடம் அமிழ்ந்துவிடு. எல்லா உணர்ச்சிகளையும் வென்று ஆத்மாவைப் பற்றிச் சிந்தித்து உன் உண்மையான தன்மையைக் கண்டுபிடி. ஆத்ம ஞானம் இல்லாத மூடர் பயங்கர நரகங்களையே அடைவர்.

—ஆதி சங்கரர்



விதுர நீதி

'நம்பி'

புத்திமானுகிய விதுரர் திருதராஷ்டிர மன்னனுக்கு வழங்கிய சில அறிவுரைகள் இந்தப் பகுதியில் இடம் பெறுகின்றன.

நான்கு

வரம் பெறுதல், அரசனுதல், புதல்வனைப் பெறுதல், பகைவனிடமிருந்து சிரமத்துடன் விடுபடுதல் இந்த நான்கும் சமமானவை.

அடுத்தவன், அடுக்கிறவன், உம்மைச் சேர்ந்தவன் என்று சரண் அடைந்தவன்-இந்த மூவரையும் தனக்குத் துன்பம் நேரிட்ட காலத்தும் கைவிடக் கூடாது.

அரசன் செய்யத் தகாத காரியங்கள் நான்கு என்று பண்டிதர்கள் சொல்லுகிறுர்கள். நேர்மையான அறிவுடையவன், காரியங்களை விளம்பித்துச் செய்பவன், சோம்பேறி, தோத்திரம் செய்பவன்–இந்த நால்வருடனும் அரசன் ஆலோசனை செய்யக் கூடாது.

வயது முதிர்ந்த உறவினனும், செல்வம் குறைந்து போன குலினனும், ஏழையான நண்பனும், பிள்ளை இல்லாத சகோதரியும் ஆகிய நால்வரும் இருக்க வேண்டும்.

தேவதைகளுடைய சங்கற்பம், புத்திமானுடைய பெருமை, கல்வி கற்றவர்களின் அடக்கம், பாவிகளின் அழிவு வேலை-இந்த நான்கையும் குறித்து என்னிடமிருந்து தெரிந்துகொள்ளும்.

அக்கினிஹோத்திரம், மௌனம், அத்தியயனம், யக்ஞம் ஆகிய நான்கினுல் அபயமில்லாமை ஏற்படுகிறது.

ஐந்து

தாய், தந்தை, குரு, ஆத்மா, அக்கினி-இந்த ஐந்துக்கும் மனிதன் முயற்சியுடன் பணிவிடைகள் செய்ய வேண்டும்.

தேவர்கள், பித்ருக்கள், உறவினர்கள், விருந்தினர், மனிதன்-இந்த ஐவரையும் போற்றுகிறவன் மேன்மையடைகிறுன்.

அரசன் செல்லும்போது, நண்பர், பகைவர், நடுவர், அண்ட வேண்டிய பெரியோர்கள், அண்டினவர்-இந்த ஐவரும் பின்தொடர்கிறுர்கள்.

ஐம்பொறிகளில் ஒரு பொறி பற்றுடையதாய் இருக்குமாயின், ஓட்டைப் பாத்திரத்திலுள்ள நீர் ஒழுகுவது போல், அறிவு அவனை நழுவிப் போகிறது.

ஆறு

அதிகத் தூக்கம், சோம்பல், அச்சம், குரோதம், முயற்சியின்மை, விரைந்து செய்யாமை-இந்த ஆறு குறைகளையும் செல்வத்தை விரும்பும் மனிதன் தள்ளிவிட வேண்டும்.

நன்ருகப் பாடம் சொல்லத் தெரியாத ஆசிரியன், அத்தியயனம் செய்யத் தெரியாத ரித்விக், காப்பாற்ருத அரசன், பிரியமில்லாது பேசுகிற மனைவி, கிராமத்தை விரும்புகிற இடையன், வனத்தை விரும்புகிற நாவிதன்-இந்த அறுவரையும், உடைந்த தோணியைச் சமுத்திரத்தில் தள்ளுவது போலத் தள்ளிவிட வேண்டும்.

மெய் பேசுதல், ஈதல், சோம்பலில்லாமை, பொருமை இல்லாமை, பொறுமை, தைரியம்-இந்த ஆறையும் ஒருவன் எப்பொழுதும் விடலாகாது. பண வருவாய், நோயின்மை, அன்போடு பேசுகிற மனைவி, கட்டுப்பட்டு நடக்கும் புதல்வன், பணத்தைக் கொடுக்கும் வித்தை-இந்த ஆறும் மனிதனுக்குச் சுகத்தைக் கொடுப்பவை.

மனதில் எப்பொழுதும் இடம்பெற்று இருக்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறையும் அடக்கும் வல்லமை எவனுக்கு இருக்கிறதோ, அவனைப் பாவங்கள் அணுகுவதில்லை. எந்தவிதத் தீமையும் அவனுக்கு நேராது.

பின்வரும் அறுவரும் அறுவரிடத்தில் வாழ்கின் றனர் :—கவனக் குறைவாக உள்ளவனிடத்தில் திருடனும், நோயாளிகளிடத்தில் வைத்தியனும், காமிகளிடத்தில் பெண்களும், யாகம் செய்பவர்க ளிடத்தில் யாகம் செய்விப்பவர்களும், மூடர்களிடத் தில் பண்டிதர்களும், வழக்குச் செய்பவர்களிடம் அரசனும் ஜீவிக்கிறார்கள்.

பசுக்கள், வேலைக்காரன், வேளாண்மை, மனைவி, கல்வி, இழிவானவர்களின் தொடர்பு-இந்த ஆறும் ஒரு கணம் கவனக் குறைவாய் இருந்தாலும் கெட்டுவிடுகின்றன.

கல்வி கற்று முடித்தவன் தன் ஆசிரியனையும், மனைவியை அடைந்தவன் தன் தாயையும், காமம் நீங்கினவன் விலைமகளையும், பயனை அடைந்தவன் வினை செய்தவனையும், கரையை அடைந்தவன் தோணியையும், வியாதி நீங்கினவன் வைத்தியனை யும் புறக்கணிக்கிறார்கள்.

நோயின்மை, கடன் இல்லாமை, அன்னிய நாட்டு வாசம் இல்லாமை, சான்றோர்களோடு தொடர்பு, தன் புத்திக்கு உகந்த வாழ்க்கை அமைப்பு, பயமில்லாத வாழ்க்கை-இந்த ஆறும் சுகமான வாழ்க்கையைக் கொடுக்கின்றன.

பொறாமையுள்ளவன், அருவருப்பு உள்ளவன், திருப்தி இல்லாதவன், கோபமுள்ளவன், எப்பொழு தும் சந்தேகப்படுகிறவன், பிறரை அண்டி வாழ்க்கை நடத்துபவன்-இந்த அறுவருக்கும் வாழ்க்கை துக்கமாய் இருக்கும்.

ஏழு

பெண்கள், சூது, வேட்டை, குடி, கடுஞ்சொல், மிகவும் கடுமையான தண்டனை, வீண்விரயம் செய்தல்-இந்த ஏழு குற்றங்களும், வேரூன்றிய அரசர்களையும் அழித்துத் துயரத்துக்குக் காரணம் ஆகின்றன. இவற்றை அரசன் விட்டுவிட வேண்டும்.

எட்டு

பிராம்மணனை முதலில் தூற்றுவது, பிராம்மணர் களின் பகைமைக்கு உள்ளாவது, பிராம்மணர்களின் பொருளைக் கவர்வது, பிராம்மணர்களைக் கொல்ல விரும்புவது, அவர்களைப் பழிப்பதில் மகிழ்வது, அவர்களைப் போற்றுவதில் மகிழாதிருப்பது, செய்ய வேண்டிய காரியங்களில் அவர்களை நினையா திருப்பது, அவர்கள் யாசிக்கும்போது இகழ்வது-இந்த எட்டும் மனிதனின் அழிவுக்கு முன்னோடிகள் ஆகும்.

நண்பர்களின் சேர்க்கை, நிறைந்த செல்வ ஆதாயம், புதல்வனின் ஆலிங்கனம், ஒத்த அன்புள்ள கணவன் மனைவியரின் தழுவல், தக்க சமயத்தில் இன்பமான உரையாடல், தனது கூட்டத்தார் மேன்மை அடைதல், விருப்பமான பொருள் கிடைத்தல், மக்கள் மதித்தல் - இந்த எட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன; சுகத்தையும் அளிக்கின்றன.

அறிவு, அடக்கம், கல்வி, நற்குடிப்பிறப்பு, மித மான பேச்சு, தனது இயல்புக்குத் தக்க தானம், செய்ந்நன்றியறிதல் - இந்த எட்டுக் குணங்களும் ஒருவனை விளங்கச்செய்கின்றன.

ஒன்பது

ஒன்பது ஓட்டைகளும், மூன்று தூண்களும், ஐந்து சாட்சிகளும் ஜீவன் வாசம் செய்வதுமான இந்த இல்லத்தை எவன் அறிந்துகொண் டுள்ளானோ, அவன் சிறந்த அறிவுள்ளவன்.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் பிரம்மசரியம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். சரீர உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள முயலும் ஒருவன் மனதில் கெட்ட எண்ணங்களை வளர்ப்பானானால் அவனது முயற்சி வீணேயாகும்.

—கண்ணபிரான்

உண்மை பேசு, சொன்னதை நிறைவேற்று, பிறர் பொருளை விரும்பாதே, நேர்மை யாய் நட, பணிவுடன் இரு, பிறருக்குத் தீங்கு செய்யாதே—உனக்கு நிச்சயமாகச் சுவர்க் கத்தில் இடம் உண்டு.

—நபிகள் நாயகம்

விசிஷ்டாத்வைதத்தில் முக்தி பற்றிய கருத்து

ஆர். ரங்காசாரி

ஜீவன்களின் இறுதி இலக்கு (லட்சியம்) முக்தி அல்லது மோட்சம் எனப்படுகிறது. ஜனன மரணச் சுழலாகிய 'சம்சாரம்' தீயது-கொடியது; இதனின்று விடுபடுவதே குறிக்கோள் என்பதைத்தான் 'முக்தி' என்னும் சொல் மறைமுகமாய் உணர்த்துகிறது.

உண்மையில் மாயை எனப்படும் பிரகிருதியின் தளைகளைக் கழற்றி, ஆன்மாவின் சுயேச்சையான நிலையைப் பெறுவதே மோட்சமாகும்; இந்த நிலையைப் பூலோக வாழ்க்கையிலேயே ஒரு ஜீவன் அடையலாம்; மிகவும் அரிதாயினும் இந்த நிலையை நாம் உணரலாம். ஆகவே நாம் பெற்றுள்ள சரீரத்தை நம் அகவாழ்வுக்கு உரிய சாதனமாகவே கொள்ளலாம். உள்ளுறையும் பரமனின் அருளின் விளைவே இந்த உடல். ஆகவே இதை இகழ வேண்டாம். "ஊன் தந்து, நிலைநின்ற உயிரும் தந்து, ஒருயிராகி, உள்ளொளியோடு உறைந்த நாதன்" என்கிறார் வேதாந்ததேசிகன்.

அத்வைத சித்தாந்தத்தின்படி, ஞானயோகத்தினால், ஆன்மாவின் சுய நிலையை-பிரம்மத்துடன் ஐக்கியத்தை-உணர்ந்தவுடன் 'கைவல்யம்' சித்திக்கிறது. இதுவே மோட்சமாகும். அத்வைத வேதாந்தத்தின்படி, முக்தி என்பது, ஒரு தனி நிலைக்கோ இடத்துக்கோ செல்வதன்று. ஆத்ம சொரூபத்தை உணர்ந்துகொள்ளும் நிலையை இவ்வுலகில் வாழும்போதே பெற்றுவிட முடியும். அதுவே ஜீவன்முக்த நிலை.

விசிஷ்டாத்வைத சித்தாந்தம் மேலே குறிப்பிட்ட கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக, ஞானயோகம் முதிர்ந்து பக்தியாகப் பரிணமித்து, பரமனிடம் முழுவதும் சரணமடைய வேண்டும். இப்படிச் செய்த 'பிரபன்ன'னை உடல் போனபின் பரமன் தன்னோடு சேர்த்துக்கொள்கிறான். பரமனும் ஜீவனும் மாறாக் காதலர் என்பது விசிஷ்டாத்வைதத்தின் துணிபு. 'வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே'.

மக்களில் உலக பந்தங்களுக்கு ஆளாகிய பத்தர் என்போர் எப்போதும் வினைச்சுழலில் கட்டுண்டிருப்பர்; முமுட்சுக்கள், உயர்ந்த வாழ்க்கைக்கு ஏங்குவர்; உயர்நிலையைப் பெற்றவரே, 'முக்தர்'' அவர்கள், எப்போதும் பந்தமில்லாத 'நித்யர். களோடு கூடி வைகுந்தத்தில் - பரமபதத்தில், பரமனுக்குப் பணி புரிந்து ஆனந்தமடைவர். பிரபன்னன் வைகுந்தத்துக்கு ஏகும் முறையை, நம்மாழ்வார் இறைவனின் அருளால் கண்டு, விவரமாய்ப் பாடியுள்ளார். இது பகவத்கீதையில் (VIII, 10-16) விவரிக்கப்பட்டுள்ள, 'அர்ச்சிராதி' மார்க்கமே ஆகும்.

சரீரத்திலிருந்து நாடி வழியாய் வெளிவந்த பிரபன்னனின் ஜீவனை, இந்திரன், பிரம்மா உட்பட வரவேற்றுத் தக்க உபசாரங்களைச் செய்து, தத்தம் எல்லைகளைக் கடத்தி வழிநடத்தி விடுவார்கள். இதன் பிறகு, அந்த ஜீவன் ஸ்ரீவைகுண்டத்தை நெருங்குவான். அப்போது, இது வரையிலும் இருந்த 'சூட்சும சரீரம்' விலகும்; ஜீவன் அம்ருதமயமான 'விரஜை' என்ற நதியைத் தன் சங்கல்பத்தாலேயே தாண்டி, சுத்தசத்துவமயமான சரீரத்தைப் பெறுவான்; பிறகு ஒரு தெய்விகமயமான தடாகத்தைக் கடந்து, 'ஸோமஸவனம்' என்ற அரசமரத்தை அடைவான்; அங்கு, 'திவ்ய அப்ஸரஸ்' பெண்கள் மாலை முதலிய உபசாரப் பொருள்களுடன் வரவேற்று, சுத்தசத்துவமயமான புலன் உணர்ச்சிகளை அவனிடம் உட்புகச் செய்வர். அப்போது, பல நித்யஸூரிகள் அவனை எதிர்கொண்டு வைகுந்தத்து நீள்வாயிலுக்கு அழைத்துச் செல்வர். அங்குள்ள காவலரும் மற்றவரும், அவனுடைய திருவடிகளைக் கழுவி, உள்ளே போகப் பிரார்த்திப்பர்; ஆனந்தமயமான திவ்ய மண்டபத்தில் புகுந்து, பகவத் குணங்களையே பேசி மகிழும் நித்யஸூரிகள், ஆசாரியர்கள் போன்ற கோஷ்டியைக் கண்டு களிப்பான். தன் ஆசாரியர்களுக்கு நன்றி கூறி வணங்கி, 'திவ்ய பர்யங்க'த்தில் ஆதிசேஷன் மீது பிராட்டிமாருடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீமந்நாராயணனைக் கண்ணாரக் கண்டு ரத்தின பர்யங்கத்தில் ஏறி, திவ்ய தம்பதிகளுடன் கலந்து பேசி, பெருவிடாய் தீர்ந்து, பரமனுடைய குணங்களைப் போன்ற குணங்களைப் பெற்று, அவன் திருவடிக்கீழ் அமருவான். பிறகு, அனந்த-கருட

விஷ்வக்ஸேனர் முதலிய நித்யஸூரிகளின் குழாத்தில் சேர்ந்து, எக்காலத்தும் கைங்கர்ய ஸித்தியைப் பெற்று, ஆனந்தத்தில் மூழ்கி நிற்பான். அங்கிருந்து ஒருபோதும் திரும்புவதில்லை.

பகவதனுபவமே 'பரிபூர்ண ப்ரஹ்மானுபவம்' எனப்படும். இத்தகைய வைகுந்தச் சித்தியும், இவ்வுலகின் திருச்ய நிழல் போல் அறிஞருக்குத் தோன்றலாம். ஆயினும், இதனை ஓர் உவமையாக-குறிக்கோளாகக் கொள்ளத் தடை என்ன? சுத்த சத்துவமான-அப்ராக்ருத-நிலையை, நம் உலக அனுபவத்தைக் கொண்டு உணர்த்துவதைத் தவிர வேறு எப்படி உணர்த்த முடியும்!

அழகு, அன்பு, தயை ஆகியவற்றின் தனி உருவாகப் பரமனைக் கண்டு களிப்பதே விசிஷ்டாத்வைத வழி; அத்வைதமும் துவைதமும் சிந்தனை, ஸங்கல்பம், தத்துவம், நிதி-இம் முறையில் பரதத்துவத்தை அணுகுகின்றன. அறிவும் உணர்ச்சியும் ஆனந்தமாய்க் கூடி நிலைத்துப் பணி செய்வதே முழு இலட்சியம் ஆகும். இதுவே ராமானுஜர் காட்டிய வழி.

* புருஷோத்தமன்-பகவான்-நாராயணன் இயல்பாகவே உயர்வற உயர்நலம் உடையவன். ஞானம் பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் முதலான குணங்களும் இதில் அடங்கும். அவன் நற்குணக் கடலே. ஆண்டான், உற்ற நண்பன், ஆசான் என்ற முறையில் அவனை நன்கு பற்றுக. அவனுடைய செங்கமலத் திருவடியிணைகளே தஞ்சம்; வேறு புகல் இல்லை-இத்தகைய மனப்பான்மையோடு அங்கே சரண் அடைக.

---

* ''ஸ்வாபாவிக-அநவதிக-அதிசய-ஜ்ஞான-பல-ஐச்வர்ய வீர்ய -சக்தி- தேஜ:-ப்ரப்ருதி அஸங்க்யேய கல்யாணகுண கனௌக மஹார்ணவம், பரமபுருஷம், பகவந்தம், நாராயணம், ஸ்வாமித்வேந, ஸுஹ்ருத்வேந, குருத்வேந ச பரிக்ருஹ்ய...... ஸ்ரீமத: சரணாரவிந்தயுகளம், அநந்ய-ஆத்மஸஞ்ஜீவநேந, தத்கத-ஸர்வபாவேந, சரணம் அநுவ்ரஜேத் ॥''

மதம் மாறுபவன் தலை போனபிறகு இன்னதென்று திரும்பிப் பார்க்கும் ஈயைப் போன்றவன்.

—பட்லர்

பிறர் குற்றம் காண்பதும், தன் குற்றம் மறுப்பதுமே மடமையின் லட்சணம்.


—ஸிஸரோ

உயிர் வாழும் பிராணிகள் அனைத்தும் ஆண்டவனுடைய படைப்பு. அதற்கு நல்லது செய்பவர்கள் ஆண்டவனின் அன்பை அடைகிறார்கள்.

—நபிகள் நாயகம்

பெரியோருக்கு வணங்கிப் பழக்கமுள்ளவனுக்கும், தினமும் பெற்றோர்க்கும் ஆசிரியருக்கும் பெரியவர்களுக்கும் பணிவிடை புரிபவனுக்கும், ஆயுளும் கல்வியும் புகழும் பலமும் பெருகுகின்றன.

—மனு தர்மம்



எவரையும் இழிவாகப் பேசாதே. இறை நம்பிக்கை அற்றவனும் இறைவனை நம்புபவனும் அவனால் படைக்கப் பட்டவர்கள்தாம்.

—அல்லாமா இக்பால்

எவனொருவன் தன் வாழ்நாளில் ஐம்புலன்களை அடக்கி, உடல் வழியாய் வரும் சுக துக்கங்களை நீக்கி, ஆத்மஞானம், நடுநிலைமை, தர்மம், அச்சமின்மை, பற்றின்மை, மெய்ம்மை—இவற்றை வளர்த்து வருகிறானோ அவன் மரணத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை.

—ஸோக்ரதர்

அருள்நெறிக் கதை :

புலியும் பசுவும் ஒரே துறையில்

முன்னொரு சமயம் பார்வதிதேவி பரமசிவனைப் பார்த்து, கீதையின் மகிமையைப் பற்றித் தனக்குச் சொல்லும்படி கேட்டாள். அதற்குப் பரமசிவன் கீதையின் ஒவ்வோர் அத்தியாயத்தின் மகிமையைப் பற்றியும் விஷ்ணு லக்ஷ்மிக்குச் சொன்ன கதைகளைச் சொன்னார். இரண்டாவது அத்தியாயத்தைப் பற்றிய கதை இது.

நாடோடி

புரந்தரபுரம் என்ற ஊரில் தேவசர்மா என்ற அந்தணர் இருந்தார். இவர் மிகச் சிறந்த அந்தணர். அதிதிகளுக்கு அன்னம் அளித்தல், வேதங்களையும் சாஸ்திரங்களையும் படித்தல், தவசிகளை உபசரித்தல் இவற்றையே இவர் தம் வேலையாகக் கொண்டிருந்தார். ஆனால் இவருக்கு மனச் சாந்தி கிடைக்கவில்லை. பரமபதத்தை எப்படி அடைவது என்ற ஆழ்ந்த சிந்தனையிலேயே இவர் மூழ்கிக் கிடந்தார்.

ஒரு நாள் ஒரு முனிவர் இவர் முன்னால் தோன்றினார். தேவசர்மா அவரை உபசரித்து, ''சுவாமி! நான் பரம கதியை அடையும் வழியை எடுத்துச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். அதற்கு அந்த முனிவர், ''ஸௌபுரம் என்ற கிராமத்தில் ஆடுகளை மேய்க்கும் மித்திரவான் என்ற ஒருவர் இருக்கிறார். அவரிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்கு உபதேசம் செய்வார்'' என்று கூறினார்.

தேவசர்மா முனிவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு ஸௌபுரம் கிராமத்தை அடைந்தார்.



அந்தக் கிராமத்தில் வடக்குப் பாகத்தில் இருந்த ஒரு காட்டில், நதிக் கரையில், ஒரு கற்பாறையில் மித்திரவான் உட்கார்ந்துகொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவரைச் சுற்றி ஒன்றுக்கொன்று விரோதமாக விளங்கும் பல மிருகங்கள் நண்பர்களைப் போலச் சேர்ந்திருப்பதைக் கண்டார்.

இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட தேவசர்மா மித்திரவானை அடைந்தார். அப்பொழுதென்று தியானம் கலைந்து விழித்துக்கொண்ட மித்திரவான் அவரை உபசரித்து அவருக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். ''பரம கதியை அடையும் வழியைத் தாங்கள் எனக்கு உபதேசிக்க வேண்டும்'' என்று தேவசர்மா கேட்டார்.

சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு மித்திரவான் சொல்ல ஆரம்பித்தார்:—

பெரியவரே! நான் ஒரு சமயம் ஆடுகளை மேய்த்துக்கொண்டு காட்டு வழியாகச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு பயங்கரமான புலியைப் பார்த்தேன். புலி என்னையும் ஆடுகளையும் கொன்று தின்றுவிடுமோ என்று பயந்துகொண்டு நான் ஆடுகளைத் துரத்திக்கொண்டு ஓட ஆரம்பித்தேன். ஆனால் என் ஆடுகளில் ஒன்று துளியும் பயப்படாமல் திரும்பி ஓடிப்போய்ப் புலியின் பக்கத்தில் நின்றது. என்ன ஆச்சரியம்! புலி அதை ஒன்றும் செய்யாமல் பேசாமல் நின்றது. அதைப் பார்த்த ஆடு, புலியைப் பார்த்து, ''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? என்னைத் தின்று திருப்தியடையுங்களேன்'' என்று சொல்லிற்று.

அதற்குப் புலி, ''ஆடே, என்னவோ தெரியவில்லை; இந்த இடத்திற்கு வந்ததும் என் விரோத புத்தி மறைந்துவிட்டது. பசியும் தாகமும் மறைந்தே விட்டன. அதனால் உன்னைக் கொன்று தின்ன வேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லை'' என்றது.

அதற்கு ஆடு, ''எனக்கும் புரியவில்லை. தங்களைக் கண்டு எனக்குப் பயமே ஏற்படவில்லை. இதன் காரணம் தங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்'' என்று கேட்டது.

அதற்குப் புலி, ''எனக்கும் தெரியவில்லை. அதோ தூரத்தில் இருக்கிறாரே, அவரைக் கேட்போம்'' என்று கூற, அவை என்னிடம் வந்தன. எனக்கும் அவை கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடிய வில்லை. ஆகவே அங்கு ஒரு மரத்தடியில் இருந்த குரங்கைப் பார்த்து அதைக் கேட்டோம்.

குரங்கு பின்வருமாறு பதில் சொல்லிற்று :—

''இந்தக் காட்டில் ஒரு பழைய கோவில் இருக் கிறது. அதில் பிரம்மா ஸ்தாபித்த சிவலிங்கம் ஒன்று இருக்கிறது. முன்னொரு சமயம் சுகர்மா என்ற ஓர் உத்தமர் இந்தக் கோவிலில் தினம் பூசை செய்து வந்தார். நதியின் தண்ணீரைக் கொண்டு லிங்கத் திற்கு அபிஷேகம் செய்வார். பிறகு காட்டில் கிடைக்கும் மலர்களைக் கொண்டு லிங்கத்திற்குப் பூசை செய்வார்.

''ஒரு சமயம் ஓர் அதிதி சுகர்மாவைத் தேடிக் கொண்டு வந்தார். சுகர்மா அவருக்குப் பழங்களைக் கொடுத்து உபசரித்து, ஆத்மஞானத்தை அடையும் வழியைத் தாங்கள் எனக்கு உபதேசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

''அதற்கு அந்த அதிதி, ஒரு பாறுங்கல்லின் மீது கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை எழுதி, அதைத் தினம் ஓதும்படி யோசனை சொன்னார். இதனால் தங்களுக்கு நிச்சயமாக ஆத்மஞானம் கிடைக்கும் என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

''சுகர்மா தினந்தோறும் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை ஓத ஆரம்பித்தார். அது காரண மாக அவருடைய மனம் பரிசுத்தமடைந்தது. அவர் சென்ற இடமெல்லாம் சாந்தி நிலவ ஆரம்பித்தது. மிருகங்கள் விரோதபாவத்தை விடுத்து நட்புடன் ஒழுக ஆரம்பித்தன. பயம் மறைந்தது. பசிதாகம் மறைந்தன. இன்று புலியும் ஆடும் இப்படி நட்புடன் விளங்குவதற்கு அந்தச் சுகர்மா இங்கு வசித்தது தான் காரணம்'' என்று குரங்கு சொல்லி முடித்தது.

மித்திரவான் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார்:—

குரங்கு சொன்னதைக் கேட்டுவிட்டு, நான், அந்த ஆடு, புலி மூவரும் அந்தக் காட்டிற்குள் இருந்த கோவிலை அடைந்தோம். அங்கு ஒரு பாறுங்கல்லின் மீது எழுதியிருந்த கீதையின் இரண்டாவது அத்தியா யத்தைப் படித்தேன். அதைத் தினம் ஓதியது காரணமாக எனக்கு ஞானம் அதிகரித்துவிட்டது. தாங்களும் அப்படியே கீதையின் இரண்டாவது அத்தியாயத்தைத் தினம் ஓதுங்கள். தங்களுக்குச் சீக்கிரமே முக்தி கிடைக்கும் என்று சொல்லி முடித்தார்.

மித்திரவானிடம் இந்த உபதேசத்தைப் பெற்ற தேவசர்மா அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டுத் தம் ஊர் திரும்பினார். அவர் தினம் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை ஓதி, அது காரண மாக மனம் பரிசுத்தமடைந்து பரமபதத்தை அடைந்தார். ★

ஜீவராசிகள் அனைத்துமே பயணிகள் தாம். இறுதி அழைப்பு வந்ததும் கண நேரங்கூடத் தாமதிக்க முடியாது.

—குரு நானக்

வாழ்க்கையில் மனிதரின் லட்சியம் தினந்தோறும் செல்வத்தையோ, ஸ்தூல உடைமைகளையோ தேடிக் குவிப்பதல்ல. ஆனால், தம்மைச் சிருஷ்டித்தவராகிய இறைவனை நாடி, நாளுக்கு நாள் அவர் அருகில் செல்லுவதுதான் மனிதர் செய்ய வேண்டிய முக்கியத் தொழிலாகும்.

—காந்திஜி



பேராசைதான் பாவம் செய்யத் தூண்டு கிறது. பேராசையும் இறைவனிடம் அன்பும் ஒரே உள்ளத்தில் ஒன்றுகூடி இருக்க முடியாது.

—நபிகள் நாயகம்

பிற உயிரைக் கொல்பவனும், பொய் சொல்பவனும், ஈயாத பொருளைப் பெற விரும்புபவனும், பெண்ணை நயப்பவனும், கள்ளுண்பவனும் இவ்வுலகிலே தமது இறுதிக்கே வழி தேடிக்கொள்கிறார்கள்.

—புத்தர்



விடுதலை

ஆ. திலகவதி

உலக பந்தங்களின் சுமைகளைச் சுமக்க முடியாமல் திக்கித் திணறிக்கொண்டிருக்கும் நான் விண்வெளியில் சிறகடித்துப் பறக்கும் வானம்பாடி போல் சுதந்திரமாகவும், மனம் நிறைய மகிழ்வுடனும் திக்கெட்டும் பறந்து செல்ல ஆவல் கொள்கிறேன்.

இந்த உலக பந்தங்களின் மீள முடியாத பூமியின் பிணைப்பு என் உள்ளக் கமலத்தை அமுந்தச் செய்வதனுல், காற்றிலே மிதந்து செல்லும் முகிற்கூட்டங்களின் இறக்கையின் ஒரு பகுதியாகி மிதந்து செல்ல எண்ணி, என் உள்ளம் இன்பகீதம் இசைக்கிறது.

ஏமாற்றத்தினுலும், பிறரை வஞ்சிக்கும் தன்மையினுலும், மனக்கசப்பான செய்கைகளினுலும், நாட்டு மக்கள் அனைவரும் துயர்கொண்டு ஒன்றுபட்டு ஒருமித்த குரலில் கூக்குரலிடும் துன்ப நிலையைக் காண மனத் துணிவின்றி, மிகவும் ஆழமான சமுத்திரத்தில் கவலையில்லாமல் நீந்திச் செல்லும் ஒரு சிறு மீனுக மாற நான் விருப்பம் கொள்கிறேன்.

இரக்கமே இல்லாத ஏ கையூட்டே! நீ இந்தப் பரந்த உலகம் முழுவதுமே நிறைந்து ஆட்சி செலுத்துகிருய். மனதில் நினைக்கவே பயங்கரமான எண்ணங்களும் பொய்யும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கண்களிலும் மறைந்து செயற்படுகின்றன. இந்தக் கொடுமையைப் பார்க்கவே சகிக்காமல் வானமண்டலத்திலே மின்னும் விண்மீன்களில் ஒன்ருக நான் விரும்புகிறேன்.

அலையலையாய் வரும் பொய்யிலிருந்து என்னை நான் காத்துக்கொள்ள விரும்புகிறேன். உண்மையான உள்ளத்துடனும் நல்ல எண்ணத்துடனும் இவ்வுலகில் யாருமே இல்லை என்பதை நான் உணர்ந்துகொண்டேன்.

இந்தக் கெட்ட செயல்களை எல்லாம் சகித்துக்கொண்டிருக்க என்னுல் ஒருபோதும் முடியவே முடியாது. எனவே வசீகரமான மலைக்குன்றுகளிலிருந்து ஓடும் அழகிய நீரோடையாக மாற நான் ஆசைப் படுகிறேன்.

இந்த உலகம் முழுவதும் ஏமாற்று வித்தைக்காரர்களால் நிறைந்துள்ளது. கடவுளே இல்லை என்று நாத்திகர்கள் போதிக்கிருர்கள்.

ஏ கடவுளே! நான் வாய் திறவாமல் இதழ்களை மூடிக்கொண்டு ஊமையைப் போல வேண்டுமட்டும் பொறுத்துக்கொண்டுவிட்டேன். இனிமேல் இந்தத் துன்பச்சுமை நிரம்பிய உலகைப் பார்த்துக் கொண்டிருக்க என்னுல் முடியாது. எனவே, இறைவா! இந்தத் துயரக் காட்சிகளைக் காண்பதிலிருந்து எனக்கு விடுதலை கொடு. உன்னிடம் என்னைச் சேர்த்துக்கொண்டுவிடு. ★



● உள்ளூரப் பிரார்த்தனை செய்வதனுல் பலன் ஏற்படுகிறது. நாம் எந்தக் கஷ்டம் வரப் போகிறது என்று அஞ்சுகிருேமோ அது நீங்கிவிடுகிறது. அல்லது, அது வரும்போது அதைச் சமாளிக்கும் சக்தி நமக்கு ஏற்படுகிறது.

—ஹாரி எமர்ஸன் போஸ்டி

● ஒருவன் ஒரு குற்றத்தையோ, ஒரு பாவத்தையோ செய்து அதனைக் குற்றமற்றவர் மீது சுமத்தினுல், நிச்சயமாக அவன் அபாண்டமான பொய்யையும் பகிரங்கமான பாவத்தையும் சுமந்துகொள்கிருன்.

—திருக்குர்ஆன்



வேறு ஒன்றும் உண்டு

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

குழந்தை தெருவில் கீழே விழுந்துவிட்டது. முழங்காலில் காயம். தாய் பதறிப்போய் விட்டாள். நல்ல வேளையாக அந்தக் காயம் சீக்கிரம் ஆறி விட்டது. பொறுக்குத் தட்டியது. பிறகு அதுவும் உதிர்ந்துவிட்டது. அங்கே சிறிது மங்கலான வடு மாத்திரம் இருக்கிறது. அதைக் காணும்போதெல்லாம் அன்னைக்குக் குழந்தை கீழே விழுந்து காயம் பட்டது நினைவுக்கு வரும்.

ஒரு நாள் குழந்தைக்கு அவள் நீராட்டினாள். முதுகிலே ஒரு சிறிய தேமல். அதைக் கண்டபோது அவளுக்குத் துணுக்கென்றது. "ஓ! இதைக் கவனிக்காமல் இருந்துவிட்டேனே! குழந்தை விழுந்தபோது இங்கேயும் காயம் பட்டிருக்கிறது. அதனால்தான் இந்த வடு இருக்கிறது" என்று புலம்பினாள்.

கீழே விழுந்த குழந்தை குப்புற விழுந்தபோது முழங்காலிலே காயம்படுவது இயற்கை. முதுகிலே எப்படிக் காயம் உண்டாகும்? இதைப்பற்றித் தாய் யோசிக்கவில்லை. குழந்தையின்பால் உள்ள அன்பு எதுவானாலும் அதற்கு வந்த தீங்கு என்று அச்சம் அடையச் செய்கிறது. காரண காரியங்களை ஆராய்ந்து முடிவு கட்டும் அறிவு அப்போது அவளுக்கு உதவுவதில்லை. அன்பின் இயல்பே அதுதான். எடுத்ததற்கெல்லாம் ஐயமும் துன்பமும் உண்டாவதற்கு அந்த அன்பே காரணம். குழந்தை உள்ளே படுத்து உறங்கும். வீதியிலே யாரோ குழந்தை விழுந்துவிட்டது என்று கேள்விப்பட்டால், 'நம் குழந்தைதானோ?' என்று ஓடிப்போய்ப் பார்த்து விட்டுப் பிறகு உள்ளே சென்று உறங்கும் குழந்தையைப் பார்த்து ஆறுதல் பெறுவது போன்ற விசித்திர நிகழ்ச்சிகள் அன்பின் விளைவாக உண்டாகும்.

காரைக்காலம்மையார் சிவபெருமானுக்குத் தாய் நிலையில் இருப்பவர். இறைவனுடைய எழிலையும் வீரத்தையும் பாராட்டும் தாயாக இருப்பார். 'ஐயையோ! இப்படி ஆகிவிட்டதே' என்று அங்கலாய்க்கும் அன்னையாகவும் இருப்பார். 'இப்படியெல்லாம் செய்யப்படாது' என்று அறிவுரை கூறும் மாதாவாகவும் இருப்பார். பக்தியுணர்ச்சி இன்னவாறுதான் செயற்படும் என்ற வரையறை இல்லை. இறைவனைப் பரதெய்வமாகவும் பரோபகாரியாகவும் போற்றும் நிலையும் காரைக்காலம்மையாரிடம் உண்டு. அப்போதெல்லாம் மற்ற அருளாளர்கள் எப்படிப் பேசுகிறார்களோ அப்படிப் பேசுவார்.

மனத்தில் மூண்டெழும் உணர்ச்சிகள் பலப்பல. மூலமாகிய குணம் எதுவோ அதன் விளைவாகப் பலவேறு நிலைகளில் மனம் எண்ணமிடும். காதலியிடம் காதல் கொண்ட ஆடவன் அந்தக் காதல் காரணமாக எத்தனையோ மனநிலைகளைப் (Moods) பெறுகிறான். சினம் கொண்டவன் உள்ளமும் அப்படியே வெவ்வேறு நிலைகளை அடைகிறது. கடலில் அலைகள் பல வகையாகக் கொந்தளித்து எழுந்தும் விழுந்தும் கரையை மோதியும் செயற்படுவது போல மனத்திலும் பலபல நிலைகளும் அந்த அந்த நிலைகளுக்கேற்ற எண்ண அலைகளும் தோன்றும்.

காரைக்காலம்மையாரின் திருவுள்ளத்திலும் இத்தகைய நிலைகளும் அலைகளும் எழும்புகின்றன. நாம் இதுவரையில் பார்த்த பாடல்களில் அப்படி உள்ள பல்வேறு நிலைகளைப் பார்த்து வருகிறோம். இப்போது தாயின் நிலையிலிருந்து பாடுகிறார். முதுகிலே உள்ள சிறிய தேமலைக் கீழே விழுந்த காயத்தின் வடுவென்று எண்ணி அங்கலாய்க்கும் தாயைப் போல இப்போது ஒன்றைச் சொல்கிறார்.

அம்மையார் அடிக்கடி இறைவனுடைய நீலகண்டத்தை நினைத்து உருகுவதை முன்பும் பார்த்தோம்; இனியும் பார்க்கப் போகிறோம். இப்போது அந்த நீலகண்டத்தை எண்ணிப் பாடுகிற பாட்டு ஒன்றைப் பார்க்கலாம்.

இறைவனுடைய கண்டம் எப்படிக் கறுத்தது? அது பழைய கதை. அதை இப்போது அம்மையார் நினைவு கூர்கிறார். அமரர்கள் எல்லாம் பாற்கடலைக் கடைந்தார்கள். அமுதை எடுத்து உண்டு சாவா மூவாப் பெருவாழ்வு பெற வேண்டும் என்பது அவர்களுடைய ஆசை. பாற்கடலை முப்பத்து முக்கோடி தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து கடைந்தார்கள். ஒரு பெரிய காரியம் செய்வதற்கு முன் தம்முடைய தலைவனிடம் சொல்லி உத்தரவுபெற்றுச் செய்தால், அது நன்றாக நிறைவேறும். அமரர்களோ எல்லாத் தேவர்களையும் மூர்த்திகளையும் அழைத்துச் சென்றார்களேயன்றிச் சிவபெருமானிடம் ஒன்றும் தெரிவிக்கவில்லை.

பாற்கடலைக் கடைந்தபொழுது உடனே அமுதம் உண்டாகவில்லை. ஐராவதம், உச்சைசிரவம் என்று பல பொருள்கள் எழுந்தன. அவற்றை அவரவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அப்பால் ஆலகால விஷம் எழுந்தது. அது தோன்றியபோதே அதன் காற்றுப் பட்டு யாவரும் மயங்கி விழுந்தனர். மயக்கம் தெளிந்து எழுந்தவுடன் அவர்களுக்குச் சிவபெருமான் நினைவு வந்தது. ஓடிச்சென்று அவன் காலில் விழுந்து ஆலகால நஞ்சிலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று முறையிட்டார்கள். சிவபெருமான் உடனே அந்த நஞ்சை வாங்கி உண்டான். அது அவன் கழுத்திலே நின்றுவிட்டது. இறைவன் திருக்கழுத்து நீலகண்டமாயிற்று. இறைவனுக்கு நீலகண்டன் என்ற திருநாமம் அமைந்தது.

பழைய காலத்தில் அமரர்கள் எதைக் கண்டு அஞ்சினார்களோ, அந்த நஞ்சை, பாற்கடலில் எழுந்த விஷத்தை, உண்டு அதனால் இறைவன் கண்டம் கறுத்தது. இது அம்மையார் அடிக்கடி நினைப்பூட்டிக் கொள்ளும் செய்தி.

பண்டு அமரர் அஞ்சப் படுகடலின்
நஞ்சுண்டு
கண்டம் கறுத்தது.

'அந்தக் கறுப்பு வடுமாத்திரமா! இதோ இன்னும் ஒரு வடு இருக்கிறது போல் இருக்கிறதே! கழுத்தளவில் நின்றுவிட்டது நஞ்சு என்றல்லவா நினைத்தோம்? அந்த நஞ்சு தலைக்கும் ஏறி அதற்கு மேலும் போய்விட்டது போல் இருக்கிறதே?' என்ற எண்ணம் இப்போது அம்மையாருக்கு எழுகிறது. ஏன்?

இப்போது நிதானமாக இறைவனுடைய திருமுடியைப் பார்த்தார். சிவந்த சடையே அவனுக்கு முடியாக இருக்கிறது. அது நீண்ட சடை; வார்சடை; சிவந்த சடை; செஞ்சடை. அந்த வார் செஞ்சடைமேல் பாம்பை அணிந்துகொண்டிருக்கிறான் இறைவன். காட்டில் மனம் போனபடி விளையாடுவது போல அந்தப் பாம்புகள் அங்கே உலாவுகின்றன. அதே சடையில் சிவபெருமான் மதியைச் சூடியிருக்கிறான். அது வெள்ளைவெளேரென்று பால் போல் ஒளிவிடுகிறது; பால்மதியாக விளங்குகிறது.

அந்த மதியை உற்றுக் கவனிக்கிறார். இறைவன் சடையில் பிறைச் சந்திரன் இருக்கிறது. அம்மையாருக்கு அது முழுமதியமாகக் தோன்றுகிறது. இறைவன் ஆடும்போது அந்த ஆட்டச் சுழற்சியிலே அது வட்ட வடிவமாகத் தோன்றுவதும் உண்டு. இப்போது அம்மையார் கண்ணுக்கு முழுமதியமாகவே தோன்றுகிறது. பிறையாக இருந்தால் சந்திரனுக்கு வடு—அதாவது முயற்கறை—இருப்பதில்லை. முழுமதியில்தான் இருக்கும்.

அம்மையார் கண்ணுக்குப் பால் போன்ற முழுமதி தோன்றுகிறது. அதனூடே வடுவும் கறுப்பாகத் தோன்றுகிறது. நீலமணி போன்ற அந்த மறு கண்ணிலே பட்டவுடனே ஒரு புதிய எண்ணம் உதிக்கிறது. 'இது மதியின் மறு அன்று; இறைவன் உண்ட நஞ்சினால் உண்டான வடு இது. அடடா! திருக்கழுத்தில் மட்டுந்தான் கறை உண்டு என்று எண்ணியிருந்தேனே! விஷம் தலைக்கு ஏறித் தலைக்கு மேல் தலையிலணிந்த மதிக்கும் ஏறி அந்த மதியில் மறுப் போல இருக்கிறது. இதுவரைக்கும் திருக்கழுத்திலுள்ளது மட்டுந்தான் கறை என்று எண்ணியது தவறு. இதோ மற்றொரு வடுவும் உண்டு. மதியிலே மறுவைப் போல அந்த விடந்தான் இங்கும் தோன்றுகிறது' என்று தாயின் நிலையில் இருந்த அம்மையாரின் உள்ளத்தில் ஒரு புதிய அலை ஓடுகிறது. கவித் திறமை உள்ளவர்களின் எண்ண அலைகள் கவி வடிவத்தில் வெளிப்படும் அல்லவா? இறைவனிடம் தாயன்பும் உணர்ச்சி விஞ்சிக் கவிபாடும் திறமும் உள்ள அம்மையார் இப்போது தம் எண்ணத்தைப் பாட்டாக வடிக்கிறார்.

பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டம் கறுத்ததும் அன்றியே—உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேல்
பால்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு.

[பழங்காலத்தில் தேவர்கள் அமுதம் வேண்டுமென்று கடைந்தபோது அவர்கள் அஞ்சும்படி பாற்

கடலில் தோன்றிய ஆலகால நஞ்சத்தை உண்டு, இறைவனுடைய கண்டம் கறுப்பு நிறத்தை அடைந்ததும் அல்லாமல், பாம்புகள் இருக்கும் நீண்ட செம்மையான சடையின் மேல் பாலைப் போல வெளுப்பான சந்திரனுக்குள்ளே, நீலமணியின் நிறத்தைப் பெற்ற மறுவென்ற வடிவில் தோன்றும் வடுவும் உண்டு.

அஞ்சப்படு நஞ்சு, கடல் நஞ்சு. அஞ்சப்படு—அஞ்சுதற்குக் காரணமான. படுகடலின்—ஆழமான கடலின் என்றும் பொருள் கொள்ளலாம். கண்டம் – சிவபெருமானுடைய கழுத்து. பணி—பாம்பு. வார்—நீண்ட. மணி மறு—நீலமணியின் நிறத்தைப் பெற்ற கறை. வடு—அடையாளம்; கறுப்பான வடு. வடு உண்டு; வடுவும் என்பதில் உள்ள இறந்தது தழீஇய எச்சவும்மை தொக்கது.]

பாம்பு விஷமுடையதாதலால் அதை நஞ்சு ஒன்றும் செய்யாது. சந்திரனைத்தான் அது மாற்றியது. வெளுப்பான சந்திரனில் கறுப்பான வடு நன்றாகத் தோன்றுகிறது.

காரைக்காலம்மையார் தாயன்போடு பாடிய இந்தப் பாட்டு, **அற்புதத் திருவந்தாதியில் 55-ஆம்** பாடலாக அமைந்திருக்கிறது.

என்ன செய்வாய்?

A. இராதாகிருஷ்ணன்

ஒரு நாள் பகவான் புத்தரின் சீடர்களில் ஒருவர் அவரிடம் சென்று பணிவுடன் நின்றார்.

சீடர் : பெருமானே! மக்களில் மிகவும் தீயவர்களாகவும் மூர்க்க குணம் உள்ளவர்களாகவும் இருப்பவர்களிடம் சென்று, தங்கள் போதனைகளை எடுத்துரைத்து அவர்களைச் சீர்திருத்த அடியேனுக்கு அனுமதி வழங்கக் கோருகிறேன்.

புத்தர் : எனக்குத் தடை ஏதுமில்லை. ஆனால் அவர்கள் உன்னை உபதேசம் செய்ய விடாமல் தடுத்தால் என்ன செய்வாய் ?

சீடர் : உபதேசம் செய்வதைத் தடுத்தாலும் என்னை அடித்துத் துன்புறுத்தாமல் இருந்தால், அவர்களை எவ்வளவோ நல்லவர்கள் என்றே நினைத்துக்கொள்வேன்.

புத்தர் : அடித்துத் துன்புறுத்துகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அப்போது என்ன செய்வாய்?

சீடர் : அண்ணலே! அப்படியே என்னை அவர்கள் அடித்துத் துன்புறுத்தினாலும், 'கற்களாலும் ஆயுதங்களாலும் தாக்காமல் விட்டார்களே!' என்று சந்தோஷப்பட்டு, அவர்களை நல்லவர்கள் என்றே நினைப்பேன்.

புத்தர் : சரி, கற்களாலும் ஆயுதங்களாலும் உன்னை அவர்கள் அடித்துத் துன்புறுத்தினால்?.

சீடர் : அப்போதும் அவர்களை இரக்கமுள்ளவர்கள் என்றே நினைத்துக்கொள்வேன். ஏனென்றால், என்னைக் கொல்லாமல் உயிரோடு விட்டுவிடுகிறார்களே!

புத்தர் : சீடனே! அப்படிப்பட்ட மனநிலை கொண்டவர்கள் உன் உயிரையும் குடிக்க அஞ்சமாட்டார்கள் என்பதை மறந்துவிடாதே!

சீடர் : பெருமானே! இந்தப் பூதவுடல் நோய்களின் இருப்பிடம். அதுமட்டுமின்றி எத்தனை எத்தனையோ பாவங்களில் ஈடுபட்டு மீளாத துயரத்தில் மூழ்கக் கூடியது. எனவே அப்படியே அவர்கள் என்னைக் கொன்றுவிட்டாலும்கூட, 'நான் உயிரோடிருந்து அனுபவிக்க இருந்த துன்பங்களிலிருந்தும் இந்த உடற்சிறையிலிருந்தும் என்னை மீட்ட தயாள குணமுடையவர்கள்' என்றே அவர்களை நினைப்பேன்.

புத்தர் : மிக்க மகிழ்ச்சி. இப்படித்தான் ஒவ்வொருவனும் தனக்கு யார் துன்பம் விளைவித்தாலும் அவர்களைக் குறை சொல்லாமல் தன் தவற்றை உணர்ந்து, தன் பிழையினால்தான் மற்றவர்கள் தன்னைத் துன்புறுத்த நேர்ந்தது என்று நினைத்துத் தங்கள் குற்றங் குறைகளைத் திருத்திக்கொள்ள முயல வேண்டும்.



மனமாயம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

கௌடபாதரின் மாண்டுக்ய காரிகையைப் பகவான் சங்கரருக்குக் கோவிந்தபாதர் உபதேசித்தார். அதன் கருத்தை, 'ப்ரஹ்ம ஸத்யம், ஜகந் மித்யா' என்ற கால் அடியில் அடக்கினார் காலடி சங்கரர். நாம் இயல்பிலே சச்சிதானந்தாத்மா. நிலவானை மேகம் கவர்வது போலவே மனதை மோகம் கவர்கிறது. அதனால் ஒன்று பலவாகத் தோன்றுகிறது. உள்ளது ஓர் ஆன்மா. அது பகுப்பற்ற, பற்றற்ற சாட்சி சேதனன். அதுவே என்றும் உள்ளது: அது சத்துப் பொருள்; உள்ளது. நாம ரூப பேதங்களெல்லாம் அதன் மேல் அத்யாரோபமே, சுமத்துவதே. நித்தியம் அநித்தியமாகாது; அநித்தியம் நித்தியமாகாது. சுயமாக இருப்பது இருந்தபடி இருக்கும்; மற்றதெல்லாம், உலகிலுள்ள நாம ரூப பேதங்களே. மொழிகள் பல, நினைப்பு ஒன்று; நினைவுகள் பல, நினைப்பவனான ஆத்மா ஒன்று. பலரில் ஒன்றைப் பார்ப்பதே அறிவு.

மநோ த்ருச்யம் இதம் த்வைதம்
யத்கிஞ்சித் ஸசராசரம்.
பெயர்வடி வாதியதாம் பேதம் கடந்த
உயர்பொருள் ஒன்றென் றுணர்.

பல்புகள் பல நிறம்; மின்சக்தி ஒன்றே. உடல்கள் பல விதம்; உள்ளுயிர் ஒன்றே. மனம் எதனால் நினைப்பதோ, உடல் எதனால் உயிர்ப்பதோ, அந்த ஆத்மா ஒன்றே. ஒன்றை அறிந்தவனுக்குச் சோக மோகம் இல்லை.

தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வம் அநுபச்யத:. இரண்டுபட்ட மனதினால் அச்சம் வருகிறது; ஒன்றே உள்ளது; இரண்டல்ல. த்விதீயாத் வை பயம் பவதி. ஏகமேவ அத்விதீயம்—இந்த ரிஷி வாக்குகளை ஆராய்வோம்.

சூரியன் உதித்தாலே இரவிருள் மறையும். அக இருள் அகன்றாலே அமர ஆத்மா புலனாகும். அமர ஆத்மா என்றும் இருந்தபடி இருக்கும். அதில் ஊன்றி இருந்தால் மனவிகாரம் ஓடிப்போகும்.

என்றும் இருப்பதவில். என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பு.

தன் நிறைவே சாந்தம், ஆனந்தம், முக்தி, சக்தி. அந்த நிலையில் தோற்றமான உலகும் கனவு போல மறையும். இதுவே அஜாதவாதம்; கௌடபாதரின் காரிகை உபதேசிப்பது. அதன்படி, சுத்தாத்மாவுக்குச் சலனம் இல்லை, பந்ததொந்தம் இல்லை.

பிறந்ததும் இல்லை, இறந்ததும் இல்லை,
பெற்றதும் இல்லை—சுத்தாத்மா
குறைந்ததும் இல்லை, நிறைந்ததும் இல்லை
மறைந்ததும் இல்லை—பரமாத்மா.

இதுதான் காரிகையின் நாலாவது பகுதி விளக்கும் அலாத சாந்தம். கார்த்திகையிரவிலே பொரிவாணம் சுற்றுகிறோம். அதன் கொள்ளி வட்டம் தோற்றமே, மாயையே. கொள்ளிவட்டம் வாணத்தின் உள்ளிருந்தே கனிந்து பொரிகிறது.

சாங்கியவாதிகள் காரணகாரியமான பரிணாம வாதம் பேசுவர். மண்ணில் பானை மறைந்துள்ளது என்பர். காரணத்திலே காரியம் உள்ளது என்பர். அத்வைதம்: உள்ள பொருள் என்றும் உள்ளதே; உள்ளதும் ஒன்றே, ஏகான்மாவே. அதுவே மாறுத நிலைபொருள், சத்துப்பொருள். சத்திலிருந்து அசத்து வராது. மாதாவுக்கு மரக்கட்டை பிறக்காது.

உலகம் மனக் கற்பனை. மனதைத் தாண்டித் தன்னறிவிலே ஊன்றினால், தானன்றி வேறில்லை. கனவில் மனம் காணும் காட்சி போலவே நனவிலும் நானா உலகைக் கண்டு மனம் மயங்குகிறது. 'நான்' என்ற ஆன்மா உள்ளபடியே உள்ளது.

பகவான் ரமண மகரிஷிகள் மிகத் தெளிவாகச் சொல்லுகிறார் :—

ஹ்ருதயகுஹரமத்யே
கேவலம் ப்ரஹ்மமாத்ரம்
அஹமஹம் இதி ஸாக்ஷாத்
ஆத்மரூபேண பாதி.

இதயக் குகையில் 'நான் நான்' என்று நிலவி யாடுவதே பிரம்மமாகும்; அதுவே நம்முள் ஓலமிடு கிறது. அதை உள்ளே கவனித்துக்கொண் டிருப்பதே ரமண யோகமாகும். அதுதான் கௌட காரிகையின் சாரமாகும்.

துவைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம், சித் தாந்தம், வேதாந்தம்—இவை முப்பொருள் பற்றியே விவாதிக்கின்றன. முப்பொருளாவது—பதி, பசு, பாசம்; பரம், ஜீவன், ஜகத்து; கடவுள், உயிர், உலகம்; சிவம், சீவன், சகம். இதைத் துவைதமும் சித்தாந்தமும் வெவ்வேறு என்னும். மத்வாசாரியார் இரண்டு விரலைக் காட்டி, 'ஜீவன் வேறு, பகவான் வேறு, உலகம் உண்மை' என்பார். இராமானுஜர், 'உலகம் லக்ஷ்மிநாராயணன் திரு விளையாடல்' என்பார். கௌடபாதர் அழுத்தமாக, 'உள்ளது சுத்தான்மாவே' என்று பல்லவி பாடுவார். சங்கர வேதாந்தம் இதன் அனுபல்லவி. ரமண வேதாந்தம் இதற்குச் சரணம்; சதாசிவரின் அத் வைதம் இதற்கு நிரவலாகும்: ''சிவபெருமான் நேரே வந்தால் நீர் என்ன வரம் கேட்பீர்?'' என்று சதாசிவரை ஒரு ஞானி கேட்டாராம். சதாசிவர், "சந்திரசூடனே, எனது சொருபானந்தத்தையே தா; வேறொன்றும் வேண்டேன். மஹ்யம் ப்ரதேஹி மதீயமேவ ஸ்வருபாநந்தம் என்றே கேட்பேன்'' என்றாராம். ''ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:. ஜீவன் பிரம்மமே; வேறில்லை'' என்கிறது சங்கரவாணி. ஒருமை காண்பதே உண்மை. இருமை மாயை யாகும்.

மாயாமாத்ரம் இதம் த்வைதம்
அத்வைதம் பரமார்த்தத:

இருமை மனமாயை; ஒருமையே மனத்தெளிவு. மனமாயை மூன்று கால தேச வர்த்தமானத்தில் இயங்கும் :—1. விஜாதீய பேதம் (Genaric difference), பிற இன வேறுபாடு, 2. ஸ்வஜாதீய பேதம் (Difference in the same family), தன் இன வேறுபாடு, 3. ஸ்வகத பேதம் (Internal limbs difference), தன் உறுப்பு வேறுபாடு. துரிய நிலையி லேயே சுத்தாத்ம சொருபம் உணர்வாகும். மற்றவை மனமயக்க உபாதி என அறிவாகும்.

அனன்ய பாவனை 'தானன்றி வேறில்லை' என்ற தன்னுணர்வு வந்தால், ''அதுவானால் அது ஆவர்; அதுவே சொல்லும்''—தாயுமானுர். ஆழ்ந்த உறக் கத்திலிருந்து எழுந்தவன் எந்த உபாதியும் இல்லா மல், 'சுகமாக உறங்கினேன்' என்கிறான். இதனால் வேறொன்றுமே இடைபுகாத சுத்தான்ம சைதன்யமே உள்ளப் பொருள் என்பதுதான் மாண்டுக்ய உப நிஷத்தின் உட்பொருள்.


ஏஷ ஸர்வேச்வர ஏஷ ஸர்வஜ்ஞ:,
ஏஷ அந்தர்யாமி யோஷயமாத்மா.

'இதுவே எல்லாம் வல்ல இறைவன்; முற்றறிவான உள்ளான்மா. அனைத்தின் காரணம் அதுவே நான், ஆத்மா, அதுவே உள்ளது' என்பதே காரிகையின் சாரமாகும்.

விச்வம் தர்ப்பணத்ருச்யமாநநகரீ-
துல்யம் நிஜாந்தர்கதம்
பச்யந் ஆத்மநி மாயயா பஹிரிவோத்பூதம் யதா
நித்ரயா.

கண்ணாடியில் ஒரு பட்டணம் நிழலுகிறது. தூக்கத்திலே உலகக் காட்சி விளையாடுகிறது. அது போல, மனமயக்கத்தினாலே வெளியுலகம் தோன்று கிறது. விழித்ததும் கனவுலகம் மறைகிறது. அது போலவே, ஞான விழிப்பு ஏற்பட்டால், தானே தான்; ஆத்மாவே மெய்ப்பொருள், மற்றது தோற்றம் என்று அறியலாம்.

இதன் விளக்கம் இன்னும் தெளிவாகப் பகவான் சங்கரரின் தக்ஷிணமூர்த்தி அஷ்டகத்திற்கு வார்த் திகமாக ஸுரேச்வராசாரியார் இயற்றிய மான ஸோல்லாஸத்திலே காணலாம். ☆





மதமும் ஒழுக்கமும்

சுவாமி விவேகானந்தர்

1

நீ உண்மையில் தூய்மையுள்ளவனாக இருந்தால் தூய்மை இல்லாததை நீ எப்படிப் பார்க்க முடியும்? ஏனென்றால், உனக்குள்ளே இருப்பது தான் உனக்கு வெளியிலேயும் இருக்கிறது. நமக்குள்ளேயே அசுத்தம் இல்லாவிட்டால், அதை நாம் வெளியில் பார்க்க முடியாது—இந்த உண்மை, வேதாந்தத்தின் அநுஷ்டானப் பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது. வாழ்க்கையில் இந்தக் கருத்தை ஏற்று நடத்த நாம் அனைவரும் முயற்சி செய்வோம் என்று நான் நம்புகிறேன்.

2

*உன்னிடமுள்ள தெய்விகத் தன்மைதான், 'கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார்' என்பதற்கு உரிய சான்றாகும். நீ ஒரு தீர்க்கதரிசியாக இல்லாவிட்டால் கடவுளைப் பற்றிய எந்த உண்மையும் ஒருபோதும் இருந்திருக்க முடியாது. நீ கடவுளாக இல்லாவிட்டால், கடவுள் என்ற ஒருவர் இருக்கவில்லை, இனி இருக்கப் போவதும் இல்லை—இந்த உண்மையை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் சொல்லுகிறது.

நாம் ஒவ்வொருவரும் தீர்க்கதரிசியாகவே ஆக வேண்டும். நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத்தான் இருக்கிறாய். ஆனால் அதை நீ அறியாமல் மட்டுமே இருக்கிறாய். இதை நீ உணரவே வேண்டும்.

ஆன்மாவினால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. அப்படி நினைப்பது மதத்திற்கு மிகவும் முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்பது ஒன்று உண்டென்றால், அது, 'நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலவீனமானவர்கள்' என்று சொல்வதொன்றுதான் பாவம்.

3

கடவுள் இல்லாதது என்று எதுவுமே இல்லை என்று வேதாந்தம் சொல்லுகிறது. உயிருள்ள கடவுள் உனக்கு உள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் நீ மாதாகோயில்களையும் ஆலயங்களையும் கட்டிக்கொண்டிருக்கிறாய். மேலும், எல்லா விதமான கற்பனைப் பிதற்றல்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறாய். மனித உடலிலுள்ள மனித ஆன்மா ஒன்றுதான் வழிபடவேண்டிய ஒரே கடவுளாகும். எல்லா விலங்குகளுங்கூடத் தெய்வத்தின் கோயில்கள்தாம். ஆனால், மனிதனே இவற்றுள் மேலானவன். கோவில்களில் தாஜ் மகாலைப் போல மனிதன் உயர்ந்தவன். கடவுளை நான் அத்தகைய கோவிலில் வழிபட முடியவில்லை என்றால், வேறு எந்தக் கோயிலும் எனக்கு எவ்விதப் பயனையும் தரப்போவதில்லை.

4

சமயசாதனையின் இரகசியமெல்லாம் கொள்கைகளில் இல்லை; அதை அநுஷ்டிப்பதில்தான்

---

* நீ தெய்வத்தன்மை நிறைந்தவனாகவே எப்போதும் இருந்துகொண்டிருக்கிறாய். எப்போதும் ஒரு தீர்க்கதரிசியாகவே இருக்கிறாய். கடவுளாக இருக்கிறாய்—என்று இங்கு அத்வைத முறையில் சுவாமிஜி குறிப்பிடுகிறார்.

—மொழிபெயர்ப்பாளன்

அடங்கியிருக்கிறது. நல்லவனுகவே இருந்து நன்மை செய்வதுதான் சமயசாதனையின் முழு உண்மையாகும். 'கடவுளே! கடவுளே!' என்று அழைத்துக்கொண்டிருப்பவன் சமயச் சான்ருேன் ஆகிவிட மாட்டான். ஆனுல் பரமபிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவனே சான்ருேன் ஆவான்.

5

ஆன்மிக வாழ்க்கைக்கோ, மனதுக்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன் கால்விரலாலும் தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கையாகும். எல்லையில்லாத சக்தி சுருள் சுருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தி விரிந்து பரந்துகொண்டே இருக்கிறது. இதுதான் மனிதனுடைய வரலாறு, சமயத்தின் வரலாறு, நாகரிகத்தின் வரலாறு, முனனேற்றத்தின் வரலாறு ஆகிய அனைத்துமாகும்.

6

மனிதனுக்கு மன அமைதியைத் தருவதுதான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும். மறு உலகத்தில் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்க்கையில் துன்பத்தை அனுபவிப்பது அறிவுடைய செயலாகாது. ஒருவன் இங்கேயே, இப்போதே, இன்பத்தைப் பெற வேண்டும். இப்படிப்பட்ட இன்பத்தைத் தரக்கூடிய மதம் எதுவாக இருந்தாலும் அந்த மதம் தான் சமுதாயத்திற்கேற்ற உண்மையான மதமாகும்.

7

எப்போதெல்லாம் எந்த ஒரு மதம் வெற்றி பெறுகிறதோ அப்போதெல்லாம் அந்த மதத்துக்குப் பொருளாதார வலிமை இருக்க வேண்டும். அதைப் போல ஆயிரக் கணக்கான மதப்பிரிவுகள் அதிகாரத்திற்கு வரப் போராடியபடி இருக்கலாம். ஆனுல், உண்மையில் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய மதம் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்றும். வயிறுதான் மனிதனுக்கு வழி காட்டியாக இருக்கிறது. அவன் நடந்து செல்லும் போது வயிறுதான் முதலில் போகிறது. பிறகு அதைத் தொடர்ந்து அவனுடைய தலை போகிறது. இதை நீங்கள் பார்த்ததில்லையா? மனிதனின் தலை முதலில் போகப் பல யுகங்கள் ஆகும்.

உங்களுடைய குழந்தைக் கனவுகள் கலைய ஆரம்பித்து, பொருள்களை உள்ளது உள்ளபடியே நீங்கள் பார்க்க ஆரம்பிக்கும்போது, உங்களுடைய தலை போய்விடுகிறது. தலை முதலில் போக ஆரம்பிக்கும் அதே சமயத்தில் நீங்களே வெளியே போய் விடுகிறீர்கள்.



கடவுளிடம் நம் குறைகளுக்காகவும் குற்றங்களுக்காகவும் எத்தனை முறை மன்னிப்புக் கேட்கிருேம்! அவர் நம்மை ஒரு முறையா மன்னிக்கிருர்? அவரைப் போல நாமும் பிறர் குற்றங்களைப் பல முறை மன்னிக்கப் பழக்கப்படுத்திக் கொள்வோம்.

—சுவைட்சர்

உங்களுடைய கவலைகளையெல்லாம் இறைவனிடம் அர்ப்பணம் செய்து விடுங்கள். ஏனெனில், உங்களுக்காக அவர் கவலைப்படுகிருர்.

—பைபிள்

என்னிடம் மூன்று செல்வங்கள் இருக்கின்றன. அவை அன்பு, சிக்கனம், அடக்கம் அன்புடையவன் அச்சமில்லாதவன்; சிக்கனமுடையவன் வன்மையாக இருக்க முடியும்; அடக்கமுடையவன் தலைவனுக ஆகமுடியும்.

— தாவோ மதம்

புதிய புத்தகங்கள்

அம்மா

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் வாழ்க்கைக் காவியம்

[ஆசிரியர் : ரா. கணபதி; வெளியீட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-600 004; முதற் பதிப்பு-மே 1978; பக்கங்கள் 652+xvi; விலை : ரூ. 30]

சில ஆண்டுகளுக்கு முன் 'கல்கி' பத்திரிகையில் நாற்பது வாரங்களுக்கு மேல் வெளிவந்தது இந்தத் தொடர்கதை. அப்பொழுது விட்டுப்போன ஏராள மான பகுதிகள் இந்தப் புதிய வெளியீட்டில் சேர்க் கப்பட்டிருக்கின்றன. பிற்பகுதியில் உள்ள பல நெடிய அத்தியாயங்கள் முற்றும் புதியவை. தொடக் கத்தில் மிகவும் விரிவாகவும் இறுதியில் மிகச் சுருக்க மாகவும் கல்கியில் வந்த குறை இங்கு நீக்கப்பட்டு நூல் நிறைவுடன் மிளிர்கிறது.

கல்கியில் விட்டு விட்டு வாசித்தவர்கள் இப் பொழுது பரிபூர்ண வடிவில் மீண்டும் இந்தச் சரிதையை ஆவலுடன் வரவேற்று வாசிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு தடவை படித்தாயிற்று என்று மறந்துவிடக் கூடிய நூலன்று இது. இராமா யணம், பாரதம் போல் திருப்பித் திருப்பிப் பாரா யணம் செய்யத் தகுந்தது. கல்கியில் படிக்காத புதிய வாசகர்களும் இதைப் படிப்பதால் பெரும் பயனடைவார்கள்.

திரு ரா. கணபதி இதை வெறும் வரலாறுக வாழ்க் கைச் சித்திரமாக மட்டுமின்றிப் பக்திக் காவிய மாக, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அமுத மாக, தமக்கே உரிய எளிய இனிய கம்பீரமான கருத்துச் செறிந்த தெள்ளிய நடையில் எழுதி யுள்ளார். அவர் அழகிய முன்னுரையில் கூறியுள்ள சில கருத்துக்களை இங்கு விமர்சனமாகத் தருகிறோம்.

''‘அம்மா’ அதிசய சுமங்கலி, அதிசய சன்னியாசினி, அதிசய குரு, அதிசயங்களை விழுங்கி விட்டு அதிசயமில்லாத சாமானிய அம்மாவாக இருந்தவள். ஸ்ரீராமகிருஷ்ணர் அவளைத் தெய்வ பீடத்தில் இருத்திப் பூஜை செய்து உலகின் நட மாடும் தெய்வமாக்கினர். அவளுடைய வயிற்றில் பிறந்த குழந்தைகள் இல்லை. ஆனால் அவளைப் போல் அன்றும் இன்றும் இனியும் எண்ணற்றவர் களுக்கு அம்மாவாக இருந்தவர் இருப்பவர் இருக்கப் போகிறவர் யார் உண்டு?

''இக் காலத்தில் பெரிதாகப் பேசப்படும் பெண் முன்னேற்றம் ஞானத்துறையில் ஏற்படுவதல்ல. லௌகிகத்தில்தான் போட்டி. இந்தப் போட்டியில் ஈடுபடுவதைவிடப் பெண்ணானவள் பெண்ணாகவே இருப்பதுதான் அவளுக்கும் அழகு, உலகிற்கும் க்ஷேமம் என்பதே சாரதாதேவியார் சரித்திரத்தில் நாம் காண்கிற உண்மை. ஆதரிச மகளாக, ஆதரிச சோதரியாக, ஆதரிச மனைவியாக, ஆதரிச அன்னையாக எந்த லௌகிகப் போட்டியும் இன்றி அமரிக்கையாக வாழ்வு நடத்தினாள் அன்னை. உலக வாழ்வு மாயம் என்பதை நன்றாக உணர்ந்தவள் எனினும், விவகாரத்தில் அதைப் புறக்கணிக்காமல், பரம எளிமையுடன் மற்றவர்களுக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினாள். தொன்றுதொட்டு ஸ்திரீ லக்ஷணமாகக் கூறப்படும் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு ஆகியவற்றை அவள் விட்டாளில்லை. ‘லஜ்ஜாபடாவ்ருதே நித்யம்’ என்பது அவள் துதி. பெண்கள் ஆத்மானுபவம் உலகியல் இரண்டிலுமே அடங்கியிருப்பதைத்தான் பகவான் ஸ்ரீராமகிருஷ் ணரும் ஸ்திரீ தர்மமாகக் கருதினர். ‘யா தே ருத்ர சிவா தநு:, சிவா விச்வாஹ பேஷஜீ, சிவா ருத்ரஸ்ய பேஷஜீ. சிவனே! உன் உடலாகிய பராசக்தி உல கிற்கு மருந்து’ என்று வேதம் கூறுவது போல், ராம கிருஷ்ணருடைய பாதி உடலாகிய சாரதாதேவி உலகனைத்திற்கும் மருந்து போலிருந்தாள்.''

பாரத நாட்டின் பண்டைய ஸ்திரீ தர்மத்தை ஓரளவு நம் ஸ்திரீகள் மறந்தும் மறுத்தும் வரும் இக் காலத்திற்கு இந்த நூலும் மருந்து போன்ற தாகும்.

வேதாந்திகளுக்குப் பிரம்மசூத்திரம் உபநிஷதம் பகவத்கீதை மூன்றும் ‘ப்ரஸ்தானத்ரயம்’ ஆவது போல், இராமகிருஷ்ணருடைய பக்தர்களுக்கு குரு மஹராஜ், தூய அன்னை, விவேகானந்தர் ஆகிய மூவர் சரிதங்களும் ப்ரஸ்தானத்ரயம். இம் மூன்றை யுமே நமக்குச் சிறந்த தமிழ் நடையில் ஆக்கி யளித்த பெருமை திரு ரா. கணபதியைச் சாரும். அவர் இந்தமாதிரிக் கைங்கர்யம் செய்துகொண்டு நீடூழி வாழ மூவரும் அருள்புரிவார்களாக!

—‘அண்ணு’

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை–600 004

1978 செப்டம்பர் மாத நிகழ்ச்சிகள்

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 8 மணி வரை

சொற்பொழிவு (தமிழ்)

1. **மகாபாரதம்**—திரு 'அண்ணு'' சுப்ரமண்யம் (3—9—78)
2. **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்**—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (10—9—78)
3. **பூதத்தாழ்வார்**—டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (17—9—78)
4. **ராமாயணம்**—டாக்டர் என். விழிநாதன் (24—9—78)

சொற்பொழிவு (ஆங்கிலம்)

1. **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**—சுவாமி தபஸ்யானந்தர் (3—9—78 & 10—9—78)
2. **ஸ்ரீமத் பகவத் கீதை**—சுவாமி கபீரானந்தர் (17—9—78 & 24—9—78)

சிறப்புச் சொற்பொழிவுகள் : சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

1. **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—சுவாமி கீர்த்திதானந்தர் (2—9—78 & 16—9 78)
2. **ஸ்ரீமத் பாகவதம்**—திரு பி. இராமகிருஷ்ணன் (23—9—78)
3. **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**—திரு த. இராதாகிருஷ்ணன் (9—9—78)
4. **இராமாயணம்**—டாக்டர் என். விழிநாதன் (30—9—78)

வாரநாட்களில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையிலும் ஒவ்வொரு நாளும் மாலை 5-45க்கு வழக்கம்போல் சொற்பொழிவுகள் நடைபெறும்.

விசேஷ தினங்கள் :

24-9-78 ஞாயிறு	அந்தர் யோகம் (சாதனை தினம்)
1-9-78 வெள்ளி	ஸ்ரீமத் சுவாமி அத்வைதானந்த ஜயந்தி
25-9-78 திங்கள்	ஸ்ரீமத் சுவாமி அபேதானந்த ஜயந்தி

13-9-78 & 27-9-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு வழக்கம்போல் ஸ்ரீ ராம நாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

மடத்தைச் சேர்ந்த சாதுக்களால் சென்னை நகரத்தில் நடத்தப்பெறும் வேறு சில நிகழ்ச்சிகள் :

9-9-78 சனி மாலை 6-30 மணிக்கு — **ஸ்ரீமத் பகவத் கீதை**
இடம் : இல. 18, 9-வது லேன், சாஸ்திரி நகர்

9-9-78 & 23-9-78 — **ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிர்தம்**
இடம் : வங்காளி அசோசியேஷன், 25, கிரி ரோடு, தி. நகர்

2-9-78 சனி — **ஸ்ரீமத் பகவத் கீதை**
இடம் : அண்ணு நகர், பிளாட் 4547, (West border of tower)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், ராய்ப்பூரைச் சேர்ந்த **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்** அவர்கள் 27-9-78 முதல் 2-10-78 வரையிலும் ஒவ்வொரு நாளும் மாலை 7-30 முதல் 8-30 வரையிலும் **துளசிதாசரின் ராமசரித மானஸ்** என்னும் பொருள் பற்றிப் பேசுவார்கள்.

சுவாமி ஆத்மானந்தரின் சொற்பொழிவுகள் :

26-9-78 மாலை 7 மணிக்கு	—துளசிதாசர்
27-9-78 மாலை 5-45 மணிக்கு	—அனுமனின் தாஸ்ய பக்தி
1-10-78 மாலை 5-30 மணிக்கு	—தேவி வழிபாட்டின் சிறப்பு

28, 29, 30 ஆகிய தேதிகளில் மாலை 7 மணி முதல் 8-30 மணி வரை சென்னை நகரத்தின் பலபகுதிகளில் ராமசரிதமானஸ் பற்றிய சொற்பொழிவுகளை சுவாமி ஆத்மானந்தர் அவர்கள் நிகழ்த்துவார்கள். [நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்]

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

முதற் பதிப்பு !   புதிய நூல் !

ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதம்

முதல் பாகம்

பக்கம்-667 + XVI   சைஸ்-க்ரௌன் 1/8

தமிழாக்கம் : சுவாமி தன்மயானந்தர்

ஸ்ரீ பரமஹம்ஸதேவருடைய திருவாக்கினின்றும் அவ்வப்பொழுது பொழிந்த அமுதமொழிகளை ஸ்ரீம-(ஸ்ரீ மஹேந்திரநாத குப்தர்) ஆர்வத்தோடு நினைந்து படம் பிடித்தாற்போன்று தொகுத்து **ஸ்ரீ ஸ்ரீ ராமக்ருஷ்ண கதாம்ருதம்** என்ற வங்காளிப் பெரு நூலாக ஐந்து பகுதிகளாக வெளியிட்டார். அந்த நூலின் முதற் பாகம் இது. முதல் முறையாக நேரடியான தமிழாக்கத்தில் வெளிவருகிறது.

நூலின் முன்னுரையில் ஸ்ரீம- அவர்களின் வரலாற்றுச் சுருக்கம், பெரிய 18 அத்தியாயங்களில் பரமஹம்சர் தமது சீடர்களோடும் அடியார்களோடும் நிகழ்த்திய ஞான சம்பாஷணைகள், அனுபந்தம், அகராதி ஆகியவற்றோடு அமைந்தது.

நடமாடும் கோயிலாக மண்ணுலகில் வாழ்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பகவானின் உபதேசங்கள் அடங்கிய ஆன்மிகப் பேழைதான் **ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதம்.**

*

முழுப் பாகத்தின் விலை ரூ. 15-00

இதே இரு பகுதிகளாகவும் கிடைக்கும் — பகுதி ஒன்றுக்கு ரூ. 8-00

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் : மயிலாப்பூர் : சென்னை 600 004

OUR ENGLISH PUBLICATIONS

ON SRI RAMAKRISHNA

Title	Rs. P.
SRI RAMAKRISHNA, THE GREAT MASTER	45.00
THE GOSPEL OF SRI RAMAKRISHNA	45.00
SRI RAMAKRISHNA—A Biography	5.00
SRI RAMAKRISHNA AND HIS MISSION	1.25
SAYINGS OF SRI RAMAKRISHNA *(Ordy.)* 8.00 *(Calico)*	13.00
SRI RAMAKRISHNA AS SWAMIJI SAW HIM	2.50
SRI RAMAKRISHNA UPANISHAD	3.50
TALES AND PARABLES OF SRI RAMAKRISHNA	8.00
WORSHIP OF SRI RAMAKRISHNA	1.00
VISIONS OF SRI RAMAKRISHNA	4.50
SRI RAMAKRISHNA KARNAMRITAM	4.50
SRI RAMAKRISHNA LEELASTHANAS	1.75
SRI RAMAKRISHNA PARAMAHAMSA	2.40
GEMS FROM THE GOSPEL OF SRI RAMAKRISHNA	0.40
SRI RAMAKRISHNA—(Illustrated)	0.35

ON SRI SARADA DEVI :

Title	Rs. P.
SRI SARADA DEVI, THE HOLY MOTHER *(Ordy.)* 14.00 *(Deluxe)*	28.00
HOLY MOTHER SRI SARADA DEVI *(Ordy.)* 18.00 *(Deluxe)*	35.00

ON & BY SWAMI VIVEKANANDA

Title	Rs. P.
SWAMI VIVEKANANDA : AWAKENER OF MODERN INDIA	2.50
EDUCATION	2.75
HINDUISM	2.50
INSPIRED TALKS	5.00
WOMEN OF INDIA	0.25
VIVEKANANDA SPEAKS TO YOU	1.00
VOICE OF VIVEKANANDA	0.40
SWAMI VIVEKANANDA	2.40
VIVEKANANDA WRITES TO YOU	1.00

ON & BY DIRECT DISCIPLES OF SRI RAMAKRISHNA

Title	Rs. P.
THE ETERNAL COMPANION	(In press)
SWAMI TURIYANANDA	4.50
SWAMI RAMAKRISHNANANDA	4.50
THE ANCIENT QUEST	2.50
CONSOLATIONS	0.50
FOR THINKERS ON EDUCATION	4.00
GOD AND DIVINE INCARNATIONS	3.75
(Superior)	7.00

Title	Rs. P.
MESSAGE OF ETERNAL WISDOM	(In Press)
PATH TO PERFECTION	0.60
SRI KRISHNA THE PASTORAL & KINGMAKER	2.00
LIFE OF SRI RAMANUJA *(Ordy.)*	12.00
(Deluxe)	22.00
PATH BEYOND SORROW	0.25

SRIMAD BHAGAVAD GITA

Title	Rs. P.
THE ETHICAL PHILOSOPHY OF GITA	4 00
BHAGAVAD GITA, THE SONG OF GOD	4.50
SCIENCE OF HUMAN DEVELOPMENT THE BHAGAVAD GITA	3.50

THUS SPAKE SERIES :

Title	Rs. P.
THUS SPAKE THE BUDDHA	0.80
THUS SPAKE THE CHRIST	0.80
THUS SPAKE THE HOLY MOTHER	0.80
THUS SPAKE SRI KRISHNA	0.80
THUS SPAKE PROPHET MOHAMMAD	0 80
THUS SPAKE SRI RAMA	0.80
THUS SPAKE SRI RAMAKRISHNA	0.80
THUS SPAKE SRI SANKARA	0.80
THUS SPAKE VIVEKANANDA	0.80
THUS SPAKE VEDAS	0.80
THUS SPAKE GURU NANAK	0.80

MISCELLANEOUS :

Title	Rs. P.
HINDUISM : ITS MEANING FOR THE LIBERATION OF THE SPIRIT	7.50
VEDIC RELIGION & PHILOSOPHY	4.50
ADVENTURES IN RELIGIOUS LIFE *(Ordy.)* 8.00 *(Calico)*	12.00
THE SPIRITUAL HERITAGE OF TYAGARAJA *(Ordy.)* 12.50 *(Calico)*	14.00
SRIMAD BHAGAVATAM—THE WISDOM OF GOD *(Ordy.)* 6.00 *(Calico)*	10.00
THE RAMAKRISHNA MATH & MISSION: ITS IDEALS & ACTIVITIES	1.50
SRIMAD RAMAYANA	6.00
SERMON ON THE MOUNT ACCORDING TO VEDANTA	4.00
NARADA'S WAY OF DIVINE LOVE	5.00
NARAYANEEYAM *(Ordy.)* 15.00 *(Calico)*	25.00
NAGAMAHASHAYA *(Ordy.)* 3.50 *(Superior)*	7.00
MEDITATION	7.50
HOW TO KNOW GOD	5.50
YOGA FOR BEGINNERS *(Ordy.)*	7.00
(Deluxe)	15
SPIRITUAL LIFE	(

SRI RAMAKRISHNA MATH :: MYLAPORE, MADRAS-600

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர்; துணை ஆசிரியர்; பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா ரு. 10
பதிப்பாளர் : சுவாமி தன்மயானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004. நாணய
அச்சிடுபவர் : R. கிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீமதி பிரிண்டர்ஸ், 3/30 மவுண்ட்ரோடு, சென்னை- டு ரு. 2

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ உண்மையைத் தவிர வேறு அழகு கிடையாது.

★ தேசத்தின் வாலிபர்களிடத்தில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

★ கெட்ட உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும், முழு அளவில் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

★ சுயமாகத் தியாகம் செய்யும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாகப் பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.

★ மனதை அலட்டிக் கொள்வதைப் போல, உடலைக் கரைப்பது வேறு எதுவும் இல்லை. கடவுளிடம் ஒருவனுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால், அவன் எதை நினைத்தும் மனதை அலட்டிக் கொள்வதற்கு வெட்கப்படுவான்.

அசோகா பாக்குத்தூள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 3702

11/234, டாக்டர் நஞ்ஜப்பா ரோடு

கோயமுத்தூர்-641018